


மில்க் வைற்
நீல சோப்
50 மேல் உறைகளைச்
சேகரித்து எங்கள்
விற்பனை வான்களில்
கொடுத்து ஒரு அழகான
சாத்துப் பையை
இனாமாகப் பெறுங்கள்.

Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு

EELA NADU

வார மலர்

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 9 இதழ் 7

பராபவ மாசி 5 ஜுலைக்: 6 (17-2-67) வெள்ளிக்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அண் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# இந்திரா தொகுதியில் வாக்களிப்பில் உற்சாகம்

## மாந்தை கிராமசபை ஊழியர் என்ன ஆனார்?

### மூன்று வாரங்களாகக் காணவில்லை

மன்னார், வியாழன்

மாந்தை கிராம சபையில் லிகிதராகக் கடமையாற்றும் 25வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பட்றிக் இரத்தினம் என்பவர் சென்ற மாதம் 29-ம் திகதியிலிருந்து காணமற் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் காரியாலயத்துக்கு கடமையாற்ற வரவில்லை என யாழ்ப்பாணத்தில் சன்சுவாம் கோவில் ஒழுங்கையிலுள்ள இவரது இல்லத்துக்கு அறிவிக்கப்பட்ட போதே ஒரு வாரத்துக்கு முன்னர் வீட்டிலிருந்துபுறப்பட்ட இவர் காரியாலயத்துக்குச் செல்லவில்லையென்பது தெரிய வந்ததாகவும் இது பற்றிப் பரபரப்படைந்த அவரது தாயாரும் உறவினரும் இது சம்பந்தமாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததாகவும் தெரிகிறது.

மாந்தை கிராமசபை ஊழியரான திரு.பட்றிக் எங்கே இருக்கிறார். என்ன ஆனார் என்பது ஒரே மர்மமாகவே இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட கிராமசபை ஊழியர்களை மன்னார்ப் பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர். இவரைப் பற்றிய தகவல்களை அறிந்தவர்களைப் பொலிஸாருக்கு உடன் அறிவிக்கும்படி பொலிஸார் கேட்டுள்ளனர்.

## 'இலங்கை இந்திய மசோதாவை ஏன் நாம் ஆதரிக்கிறோம்?'

### வட்டுக்கோட்டை எம். பி. விளக்கம்

புன்னாலைக்கட்டுவன், வெள்

"ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில், ஐந்தரை இலட்சம் இலங்கை வாழ் இந்தியரைக் கட்டாய நாடு கடத்தலுக்கு உள்ளாக்குவதாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியதாலேயே அன்று நாம் அதை எதிர்த்தோம். ஆனால் இன்று கட்டாய நாடு கடத்தல் இல்லை யென்று கூறியிருப்பதாலேயே அதை நாம் ஆதரிக்கிறோம்."

இவ்வாறு வட்டுக்கோட்டை எம்.பி.யும் தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசி திரு.அ.அமிர்தலிங்கம் உரும்பிராய் இந்துக் கல்லூரிச் சரித்திர அரசியல் மன்ற விசேஷ கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு.வி.புஷ்பராசா தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் பேலும் பேசுகையில் கூறியதாவது: "இன்று உருவாகியுள்ள புதிய நிலைமையில் இந்திய யாப்பின் எட்டாவது ஷரத்துக்கமைய ஒரு இந்தியன் மனுப்பண்ணி, இந்தியப் பிரசையாக விரும்பினல் மட்டுமே அவன் இலங்கையை விட்டுச்செல்லலாம்.

பதினொரு ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட சட்டமே இன்னும் சரி வர அமுல் நடத்தப்படாதிருக்கையில் தமிழ் மொழிச் சட்டம் பூரணமாக அமுல் நடத்தப்படாமை வியப்புக்குரிய தொன்றல்ல. எனினும், தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முட்டுக் கட்டையிடும் அரசாங்க உத்தியோகத்தர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் வாக்குறுதியளித்துள்ளார்."

## பீகாரில் கைகலப்பு; கண்ணீர்ப்புகை வீச்சு

புதுடில்லி, பெப். 16

நேற்று ஆரம்பமான இந்தியப் பொதுத்தேர்தலின் இரண்டாவது சுற்றாக, மத்திய பிரதேசத்தின்சிலபகுதிகளில் இன்று தேர்தல்நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தத்தேர்தலில் முப்பத்தி மூன்று லட்சம் மக்கள் வாக்களித்ததாக அறிவிக்கப்பட்டது.

55 சட்டசபை ஸ்தானங்களுக்கும் 10 லோகசபை ஸ்தானங்களுக்கும் மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற இன்றையவாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு உதவியாக 30,000 தேர்தல் அதிகாரிகள் கடமையாற்றினர். 325 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

### சிறுசிறு அசம்பாவிதம்

நேற்றுநடைபெற்ற முதல் சுற்று தேர்தலில்தமிழ்நாடு, பீகார், மைசூர் ஆகிய இடங்களில் சிறுசிறு அசம்பாவிதச் சம்பவங்கள் நடைபெற்றதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. பீகாரில் இரு கோஷ்டியினரிடையே நடந்த கைகலப்பைத் தவிர்ப்பதற்கு பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் செய்தனர். சென்னையில் வாக்குப்பதிவின் போது 11 பேர் ஆள் மாராட்டம் செய்ததாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### வாக்களித்த 106 வயது மூதாட்டி

தமிழ்நாட்டில் நேற்றைய தேர்தலின் போது வயது போன மூதாட்டிகளும், கண்பார்வையற்றவர்களும், நிறைமாத கர்ப்பிணிகளும் நடந்து வந்து வாக்குப் போட்டனர்.

தியாகராயநகரில் 106 வயது மூதாட்டி ஒருவர் பிறரின் உதவியுடன் வந்து வாக்களித்தது பலரையும் கவரக்கூடியதாகவிருந்தது.

### காமராஜர் அம்மா

விருதுநகரில் காங்கிரஸ் கட்சி அக்கிராசனர் திரு. காமராஜரின் 85 வயது தாயார் சைக்கிள்ரிக்ஷாவில் சென்று வாக்களித்தார்.

இங்கு வாக்களித்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் வாக்களித்து சில நிமிட நேரத்தின் பின் பிள்ளை பெற்றார்.

தேர்தல் தலைமைக் கமிஷனர் திரு. சுந்தரம் உத்தர பிரதேசத்தில் நேற்று 20 தொகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டார். அங்கு வாக்குப்பதிவுகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில்

1962ல் நடந்த தேர்தலை விட இம்முறைத் தேர்தல் தமிழ்நாட்டில் மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டதாகவும், வாக்களிப்பும் மும்முரமாக நடந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நாளை மத்திய பிரதேசத்தின் எஞ்சியுள்ள சில தொகுதிகளிலும், அஸாமில் 6 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும். முதல் முறையாக இம்முறை தேர்தல் அந்தமான், நிகோபார் தீவுகளுக்குநடைபெறவிருக்கிறது. 47,000 வாக்காளர்களைக் கொண்ட இங்கு. வருகிற சனிக்கிழமை தேர்தல் நடக்கும்.

கேரளத்தில் தேர்தலுக்கான இறுதிநாள் நெருங்க நெருங்க விறுவிறுப்பு அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. மளதாளமும், ஓட்டுவேட்டையில் இறங்கியிருக்கும் கட்சிக் காரர்களின் தீவிரமும் மும்முரமாகிக் கொண்டிருக்கிறது.

### இந்திரா தொகுதியில்

உத்தர பிரதேசத்தில் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா போட்டியிடும் தொகுதியான ராயபரேலியில் 60 வீதம் பேர் வாக்களித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இங்கு தேர்தல் மிகவும் உற்சாகத்துடனும் விறுவிறுப்புடனும் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## படங்கள் அனுப்பியது

வாஷிங்டன், பெப் 19.

அமெரிக்கா அனுப்பி வைத்த லூனஆர்பிட்டர்3' விண்வெளிக்கலம் சந்திரமண்டலத்தின் சிலபகுதிகளைப் படம் பிடித்து அனுப்பியதாக அறிவிக்கப்பட்டது. இப்படங்கள் தெளிவாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திரா

புதுடில்லி, பெப். 16

புவனேஸ்வரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கல் வீச்சினால் மூக்கெலும்பு முறிந்து சிகிச்சைசெய்து கொண்ட இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மூக்கில் போடப்பட்டிருந்த பிளாஸ்டர் நேற்று அகற்றப்பட்டது. டாக்டர்கள் இன்று அவரை மீண்டும் பரிசோதனை செய்தார்கள்.

## வாக்களிக்க வங்கி ஊழியர் விடவில்லை

கொழும்பு, வியாழன்

இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுத்தேர்தலில் இலங்கையிலிருந்து வாக்களிக்கச் செல்லவிருந்த பலர் இப்போது இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்தினல் அவ்வாறு செல்ல முடியாது போய்விட்டதாக அறியப்படுகிறது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து இந்திய தேர்தலில் வாக்களிக்கும் உரிமையுள்ள பல இந்தியர்கள் வெளிநாட்டுச் செலாவணிக்காக விண்ணப்பித்திருந்ததாகவும் வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக [illegible] துக்குஅவர்கள் அவற்றைப் பெறமுடியாததால் இந்தியா சென்று வாக்களிக்க முடியவில்லையெனவும் தெரியவருகிறது.

விண்ணப்பம் செய்திருந்தவர்களில் சுமார் 15 சதவீதத்தினரே இந்தியா சென்று பொதுத்தேர்தலில் [illegible] தாகவும் அறியவருகிறது.

## விவசாயப்படையில் சேர ஒன்றரைலட்சம் பேர் மனு

கொழும்பு, வியாழன்

விவசாயப் படையில் சேர்வதற்கென வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட சகல மகாணங்களிலுமிருந்தும் இதுவரை ஒருலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளதாக அறியப்படுகிறது. விவசாயப்படை 'வீரர்களை' அந்தந்தப் பகுதி, காரியாதிகாரி தேர்ந்தெடுப்பார். இதற்கான நேர்முகபரீட்சை விரைவில் நடைபெறவிருக்கிறது.

## லெஸ்லி யாழ். விஜயம்

உடுப்பிட்டி, புதன்

திரு. லெஸ்லி குணவர்த்தனு இன்று 17-ம் திகதி வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டமொன்றிலும் கலந்துகொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# ராஜரத்தினவின் திடீர் அரசியல் பிரசாரம்

## 'அரசியல் ஊழியராகும்' அரசாங்க ஊழியர் நிலை

வெலிமடைத் தொகுதி உபதேர்தலும் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் பிரதமர் தொடக்கம் உள்நாட்டு அமைச்சர் வரை நிகழ்த்திய உரைகளும் சென்ற வாரத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களாகும்.

வெலிமடைத்தொகுதிஉப தேர்தலில் அத்தொகுதியின் முன்னாள் பிரதிநிதி திரு. பேர்ஸி சமரவீராவே மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு. சமரவீரா சுயேச்சை அபேட்சகராகவே போட்டியிட்ட போதிலும் ஆளும்கட்சியின் ஆதரவுடன்தான் அவர் தேர்தலில் நின்றார் என்பது அனைவரும் அறிந்ததே. யு. என். பி. அங்கு ஓர் அபேட்சகரைப் போட்டிக்கு நிறுத்தாதது திரு. சமரவீராவுக்காகவே. 1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் சுயேச்சை அபேட்சகராக திரு. சமரவீரா போட்டியிட்டார். அத்தேர்தலில் ஜாதிக விமுக்திப் பெரமுனைத் தலைவரும் 'வெலிமடை வீரரு'மான திரு. கே. எம். பி. ராஜரத்தினவை அவர் தோற்கடித்தார். பார்லிமெண்டில் திரு. சமரவீரா ஆளும் கட்சியை ஆதரித்துவந்தார். தேர்தல் ஆட்சேப மனுமீதான விசாரணைமுடிவில் திரு.சமரவீராவின் தெரிவு செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. 1958-ம் ஆண்டில் திரு ராஜரத்தின ஆரம்பித்த தார்ப்பூச்சு இயக்கத்தில் ஈடுபட்டு திரு. பேர்ஸி சமரவீராவும் சிறைசென்றிருந்தார். அச்சமயம் திரு. ராஜரத்தினவுக்கு வழங்கப்பட்ட 'மன்னிப்பு' சமரவீராவுக்குக் கிடைக்கவில்லை. தார்ப்பூச்சு இயக்கத்தில் சிறைசென்றதன் விளைவுதான் தேர்தல் ஆட்சேப மனுவும் செல்லுபடியாகாதென வழங்கப்பட்ட தீர்ப்புமாகும். தேர்தல் ஆட்சேபமனுவில் திரு. சமரவீராவின் தெரிவு செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிப்பதுடன் திரு. கே. எம். பி. ராஜரத்தின வெலிமடைத் தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கும்படியும் கோரப்பட்டிருந்தால் இந்த உபதேர்தலே நடைபெறாமல் திரு.ராஜரத்தின வெலிமடைத் தொகுதிப் பிரதிநிதியாகியிருக்கலாம். திரு. சமரவீராவின் தெரிவு செல்லுபடியாகாதென்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததேயொழிய திரு. சமரவீரா மீண்டும்போட்டியிடுவதற்குத் தடையெதுவும் இருக்கவில்லை. திரு. சமரவீரா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளபோதிலும் அவர் ஜனப்பிரதிநிதிகள் சபை இம்மாதம் 21-ந் திகதி மீண்டும் கூடும்பொழுது வெலிமடைத் தொகுதி பிரதிநிதியாக பிரமாணம் எடுத்துக் கொள்வாரா?

சிறைத்தண்டனை அனுபவித்ததால் இவ்வருடம் ஜூன் மாதம்வரை அவர் பார்லிமெண்ட் பிரதிநிதியாக இருக்க சட்டம் இடம் கொடுக்காது. தேர்தலில் அவர் வெலிமடைத் தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டாலும் சபையில் அவர் பிரதிநிதியாகப் பிரமாணம் எடுக்கும்வரை அவரை ஒரு பிரதிநிதியாகக் கருதச் சட்டம் இடங் கொடுக்காது. திரு. சமரவீரா ஜூன் மாதம் வரை பதவிப் பிரமாணம் செய்து கொள்ளாமலிருப்பாரா அல்லது அதற்குள் கவர்னர் ஜெனரல் அவருக்கு பொது மன்னிப்பு வழங்குவாரா? இதற்கிடையில் திரு. சமரவீரா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மீண்டும் ஒரு மனுதாக்கல் செய்யப்படுமா?

### ராஜரத்தின நிலை என்ன?

திரு பேர்ஸி சமர வீரா வெலிமடைத் தொகுதிப் பிரதிநிதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டாலும் 1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவர் பெற்ற அதிகப்படியான வாக்குகளைவிட இம்முறை அவருக்குக் கிடைத்த வாக்குகள் குறைவானவையே. 673 அதிகப்படியான வாக்குகள் தான் திரு. சமர வீராவுக்குக் கிடைத்துள்ளன. திரு. சமர வீராவுக்கு கிடைத்தவாக்குகளுக்கு அடுத்தபடி திரு. ஜேமிஸ் சில்வாவுக்கு அதிக வாக்குகள் கிடைத்திருக்கின்றன. திரு. ஜேமிஸ் சில்வாவும் சுயேச்சை அபேட்சகராகவே தான் போட்டியிட்டார். ஆனால் திடீரென்று அவருக்கு ஜாதிகவிமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தினவின் ஆதரவுகிடைத்தது. திரு. ராஜரத்தின வெலிமடைத் தொகுதியின் முன்னாள் பிரதிநிதி. ஜாதிகவிமுக்தி பெரமுனையின் தலைவர். ஆனால்இப்போது அவர் ஓர் அரசியல் வாதியாக இருக்கவில்லை. அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருக்கிறார். அதாவது அவரும் ஓர் அரசாங்க ஊழியர் என்றஸ்தானத்தில் வைக்கப்பட வேண்டியவர். அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்த வேண்டிய பொறுப்பிலிருப்பவர். அரசியல் கொள்கை வேறுபட்டாலும் பொதுமக்களின் நம்பிக்கைக்கும் அரசாங்கத்தின் நம்பிக்கைக்கும் உரியவர். அரசாங்கத்தின் மீது விசுவாசமாக இருக்க வேண்டியவர். சென்ற பொதுத் தேர்தலில் திரு. பேர்ஸி சமரவீராவைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்து கொண்டு தம்மை வெலிமடை மக்கள் நிராகரித்து விட்டதால் அரசியலை விட்டு ஒதுங்கியிருந்தவர் திருரராஜரத்தின. தமதுவகுப்பு வாதக்கொள்கையை வெலிமடை மக்கள் நிராகரித்ததால் வகுப்புவாதம் நீண்டகால பயனளிக்காதென்பதை அவர் உணர்ந்து கொண்டதாகவே தோன்றியது. தேர்தலின் பின் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்த அவரது மனைவியும் ஊவா பரணகம எம். பி. யுமான திருமதி குசுமாராஜரத்தின, தமிழ் மொழிச் சட்ட விசேஷ விதிகள் கொண்டு வரப்பட்பொழுது அதை எதிர்த்து உதவிமந்திரிப் பதவியை உதறி எறிந்து அரசாங்கக்கட்சியுடனிருந்த உறவையும் துண்டித்து எதிர்க்கட்சிப் பக்கம் சென்று தமிழ் மொழிச்சட்டவிதிகளை எதிர்த்து வாக்களித்தார். தமது மனைவி அரசாங்கக் கட்சியுடனுள்ள உறவைத் துண்டித்தபின்னர்தான் திரு. ராஜரத்தின அரசாங்க கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவியேற்றார். வகுப்புவாதக் கொள்கையின் தோல்வியுடன் அரசியலுக்கேஅவர்முழுக்குப்போட்டு விட்டதாகக் கருதப்பட்டது. வெலிமடை உபதேர்தலில் போட்டியிட அவர் மறுத்ததும் இதை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

ஆனால், 'பழையபடிவேதாளம் முருக்கமரத்தில்' என்பதுபோல் திரு.ராஜரத்தின தமது சுயரூபத்தைக்காட்டி விட்டார். உபதேர்தலில் போட்டியிட்ட மற்றொரு சுயேச்சை அபேட்சகரான திரு.ஜேமிஸ் சில்வாவை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். பேசினார் என்பதைவிட பழையபடிவகுப்புவாதத்தைக்கக்கியிருக்கிறார் என்று சொல்லுவது பொருந்தும். சமஷ்டிவாதிகளிடமிருந்தும்கள்ளத் தோணிகளிடமிருந்தும்நாட்டைக் காப்பாற்றவேண்டுமென்று அவர் கூறினார். ஆனால் அவரை வெலிமடை மக்கள் காப்பாற்றவில்லை, அவர் ஆதரித்த ஜேமிஸ்சில்வாவை அவர்கள் நிராகரித்து விட்டனர். ஆயினும் ஜேமிஸ்சில்வாவுக்குக் கிடைத்த ஆறுயிரத்துக்குமதிகமான வாக்குகள் வகுப்புவாதத்துக்கு இன்னும் ஆதரவிருக்கிறதென்பதைக் காட்டுகிறது.

தேசீய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் நடைபெற்ற உபதேர்தல்களிலெல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே வெற்றிபெற்றுவந்தது. இது அரசாங்கக்கட்சி வட்டாரங்களில் கவலையளித்துவந்தது. வெலிமடையில் சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட புஞ்சி பண்டா ரத்னயகா தோல்வியடைந்தது ஆளும்கட்சியினருக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் அளித்திருப்பது உண்மையே. இந்த மகிழ்ச்சி, அரசாங்கத்தின் விசுவாசமிக்க ஊழியனுக இருக்கவேண்டிய ஒருவர் அரசாங்கத்தின் தேசீயஐக்கிய கொள்கைக்கு விரோதமாக தேர்தலில்வகுப்புவாதப் பிரசாரம் செய்திருப்பதையும் அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளையும் மறைத்து விடக் கூடாது,

திரு.ராஜரத்தினவின் அரசியல் கொள்கை எப்படியும் இருந்துவிட்டுப்போகட்டும். ஆனல் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்ற முறையில் அவர் வகுப்புவாத அரசியலில் ஈடுபடுவது கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கோ நாட்டின் முன்னேற்றத்திற்கோ நன்மையாகாது. கூட்டுத்தாபனத்தின்மீது மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டுமானல் அதன் தலைவரும் ஊழியர்களும் தீவிர அரசியலில் ஈடுபடாமலும், இனமத

(11-ம் பக்கம் பார்க்க

சலக்கழிச்சல்!
10
தோல்சம்பந்தமான
சொறி, சிரங்கு,
தேமல், கரப்பன்
முதலியன குணப்படுத்த
உத்தரவாதம்.
சச்சிதானந்தா
வைத்தியசாலை
மிந்திரன் அம்பாள்
கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி P.O.

கல்வி
விஞ்ஞான வகுப்புக்கள் 3-3-67-ல் ஆரம்பமாகின்றன.
1. இரசாயனம்
2. பௌதிகம்
3. தூய கணிதம்
4. உயர் கணிதம்
5. பிரயோக கணிதம்
6. உயிரியல்
ஆகிய பாடங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் காலை 9-00—மாலை 7-00 வரை நடாத்தப்படும். முழுப் பாடங்கட்கும் ரூபா 25/ மட்டும். விண்ணப்ப முடிவு திகதி 28-2-67. விண்ணப்பிக்க.
வர்த்தக கலாசாலை,
230, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

### 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்'

'உலகப் பேரழகியாகத் தெரிவு செய்யப்பட்ட ரீட்டா பாரியா தனது பெற்றோரையும் பிறந்த நாட்டையும் மறந்துவிட்டு மேனாட்டு சொகுசுவாழ்க்கையே சதமென்று நம்பியிருக்கிறாள்' என்று பிரிட்டனில் இந்திய தூதுவராயிருந்த டாக்டர் ஜீவராஜ் மேத்தா கூறியுள்ளார். பின்வரும் திருத்தாண்டகம் அவருடைய கருத்தை உள்ளடக்கி, திருநாவுக்கரசு நாயனாரின் மன்னிப்புடன், வெளிவருகிறது.

முன்னம் அவன் தலையில் நாமம் போட்டாள்
லோபோ அவனுக்கு முழுக்கே போட்டாள்
பின்னம் 'பொப்'புடனே வியட்னாம் சென்றாள்
பெயர்த்தும் புகழுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தவிக்கின்றாள் லால்வாணி தாளை நாடி.

[லோபோ: ரீட்டா பாரியாவின் கைவிடப்பட்ட முதலாவது காதலன், 'பொப்' வியட்னாமுக்கு ரீட்டாவுடன் சென்ற பொப் ஹோப் என்ற அமெரிக்க ஹாஸ்ய நடிகர். லால்வாணி: ரீட்டாவின் புதிய காதலன்.]

—முப்பேசுகை

டெக்ரோன் மிக்ஸ்ட் சேட்கள்
15க்குக் குறையாத பல்வேறு நிறங்களில்
வழக்கமான விலை ரூபா-16-50
விற்று முடிப்பதற்காக ரூபா-14-00 மட்டுமே
டயறம்ஸ்
54, பெரிய தெரு. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு ஏன் தோன்றுகிறது?

"மனிதனுக்கு கனவு ஏன் தோன்றுகிறது? நித்திரை செய்யும் சிசுக்கள் மீது நடத்தப்பட்ட பரீட்சார்த்தமான சோதனைகள், சிசுக்களின் மூடிய கண்கள் எதையோ பார்ப்பது போல அசைவதைக் காட்டியிருக்கின்றன. இப்பரிசோதனை வாலிபர்கள் மீதும் நடத்தப்பட்டிருக்கிறது. இரவில் நித்திரைசெய்பவர்களில் குறைந்த பட்சம் பகுதியினராவது ஏதோ உளமோதலில் அகப்பட்டிருப்பவர்களாகக் காணப்பட்டிருக்கின்றனர். இக்கட்டத்தை 'துரிதவிழி அசைவுக் கட்டம்' என்று அழைக்கலாம்.

பரிசோதனையின் அடுத்த கட்டத்தில் நித்திரை செய்பவருக்குப் பக்கத்தில் சப்தத்தைக்காட்டும்கருவிவைக்கப்படுகிறது. கண் துரிதமாக அசையும் போதெல்லாம்கருவியில் சீக்கிரம் சப்தம் பதிவாகிறது. நித்திரை கலைக்கப்பட்டு எழுப்பப்பட்ட அனைவரும் ஒரேபதிலை கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடையர் கனவுகளை இக்கிச்சிடும் சப்தம் எப்போதுமே குறுக்கிட்டிருக்கிறது.

கனவு காணுதோர் அல்லது அத்திபூத்தாற் போல் காண்பவர்கள் பெரும் தொகையானோர் இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் ஒரு காலத்தில் நிலவியது. ஆனால் பிரதியொருநபரும் இரவில் கனவு காண்பது தான் உண்மை. மேலும் கனவுகளில் சிலவினாடிகள் வரை மாத்திரமே நீடிக்கின்றன என்ற நம்பிக்கை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் கனவுகள் 10 நிமிஷம் முதல் அரைமணித்தியாலம் வரை நீடிக்கின்றன என்பது சோதனைகாட்டும்முடிபுமேலும்சப்தம், தாகம் இத்தியாதிபுறத் தூண்டுதல்களை பொறுத்து கனவு தோன்றுவதில்லை என்பது முடிவு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் ஆண்களை விட அதிக கனவு காண்கின்றனர் என்ற நம்பிக்கையும் இப்போது தகர்க்கப்பட்டுள்ளது. இறுதியாக, கனவு காணும்போது தான் மனிதன் நிம்மதியாகத் தூங்குகின்றான். என்பது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

கனவுகாணும் சாத்தியப்பாட்டை மனிதன்பரிபூரணமாக இழக்கநேரிட்டால், அவன் துயிலெழுந்த பின்னர் சூழ்நிலையுடன் இணைந்து இயக்கும் சக்தியை இழந்து விடுவான் என்று விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். பின்னர்ஒருவேளை தன்னுடைய செயல்களையோ அல்லது சூழ் நிலையையோ சரியாககணிக்கமுடியாமலும் போய்விடும். மனித உடலுக்கு எப்பாதும் ஒரு குறித்த அளவு கனவுகள் தேவைப்படுவறன. பரிசோதனைக்[illegible]ான நபர்களின் கனவு தடைசெய்யப்பட்டபோது இந்த கனவுகளை [illegible] கனவுகள் அடுத்த இரவு பெறஏற்பாடு செய்யப்பட்டது. மனித உடலமைப்பில் ஏதோ ஒருகருவி இருக்கிறது. இது கனவுகளை ஒழுங்குபடுத்த உதவுகிறது.

# 80 வயது வரை உழைக்கலாம்

வருங்காலத்தில் தூங்கும் நேரம் இரண்டு அல்லது மூன்று மணி நேரந்தான் மனிதனுக்குக் கிடைக்கப் போகிறது. அவன் நூறு அல்லதுஅதற்கு மேற்பட்ட வருடங்களும் ஜீவித்திருக்க முடியும். 80-வது வயது வரை நன்கு உழைத்துப் பாடுபடமுடியும். இந்தத் தகவல்களை ஜெர்மன் பேராசிரியர் சில்பெர்மன் வெளியிட்டிருக்கிறார். ஆண்கள் செய்யும் எல்லா வேலைகளிலும் பெண்கள் போட்டியிடுவர் என்றும் சமைத்து உண்பது இப்போது முக்கியமாக இருப்பதுபோல் எதிர்காலத்தில் அவ்வளவு முக்கியமாக இராதென்றும் அவர் கூறுகின்றார்.

## [illegible]ான வெளிக்கு சுண்டெலி செல்லும்

மிகச் சிறிய பாலைவனச் சுண்டெலி ஒன்று வான வெளிப் பயணங்களுக்காக அமெரிக்க வான வெளி ஆய்வு நிறுவனத்தால்தயார் படுத்தப்பட்டு வருகிறது. அச்சுண்டெலி [illegible]தற்குத் தண்ணீர் இல்லாமலேயே உயிர் வாழக்கூடியதாகும். அது சூரிய காந்தி விதைகளை மட்டுமே தின்று உயிர் வாழ்கிறது. அச்சுண்டெலி வழக்கமாக உணவைச் சேமித்து வைத்துக் கொள்ளும் தாடைப் பையில் நுண்ணிய ஒலி அனுப்பும் கருவி (ட்ரான்ஸ் மீட்டர்) ஒன்று பொருத்தப்படும்.

## உலகம் சுற்றும் சகோதரர்கள்

### யாழ்ப்பாணம வந்தனர்

பலாலி, புதன்

உலக சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டனைச் சேர்ந்த ஸ்ரீபன் என்னும் 20 வயது இளைஞனும் அவர் சகோதரியான யூலியாவும் [18 வயது] இன்று பலாலி விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் இருவரும் கனடா, ஜப்பான், போலந்து இந்தியா ஆகிய நாடுகளுக்கு சென்றபின் இங்கு வந்ததாகத் தெரிவித்தனர். பிரிட்டனிலிருந்து சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் புறப்பட்ட இந்த உலகம் சுற்றும் சகோதரர்கள் இலங்கைக்கு தாம் இம் மாதம் 2-ந் திகதி வந்ததாகவும் யாழ்ப்பாணத்திலே முக்கிய இடங்களைப் பார்ப்பதற்குத் தாம் பெரிதும் ஆவல்கொண்டிருப்பதாகவும் நமது நிருபரிடம் தெரிவித்தார்கள்.

இங்கு பெண்கள் அணியும் சேலை தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக யூலியா கூறியுள்ளார்.

## ராஜிநாமா

யாழ்ப்பாணம், வியாழன்

உள்ளூராட்சி அதிகார சபையில் நியமனம் பெற்றதன் காரணமாக நீர்வேலி கிராமசபையின் உப-தலைவர் திரு. தம்பிமுத்து சோதிலிங்கம் தனது உப-தலைவர் பதவியையும் அங்கத்தவர் பதவியையும் ராஜிநாமா செய்துள்ளார்.

## திரு நாரண துரைக் கண்ணன் மணிவிழாக் குழு

"'ஜீவா'' என்ற புனைபெயரில் புகழ்பெற்ற திரு நாரண துரைக் கண்ணன் ஒரு தியாகி. தியாகிகள் அரசியலில் மட்டும் இல்லை, அறிவுலகிலும் இலக்கிய உலகிலும் உண்டு. திருநாரண துரைக் கண்ணன் 30ஆண்டுகளாக தமிழ்த் துறையில், இலக்கியத்துறையில், அறிவுத்துறையில் தம்மைத் தியாகம்செய்துள்ள தன்னலம் கருதாத பெருந் தியாகி. அவருக்கு நாம் அளிக்கும் இந்தக் கேடயம் நமது நன்றியறிதலைக் காட்டிக் கொள்ளச் செய்யும் ஒரு சிறுமுயற்சியாகும். அவருக்கு நாம்எவ்வளவோ செய்யக் கடமைப் பட்டுள்ளோம்.'' இவ்வாறு செங்கற்பட்டு எழுத்தாளர் மகாநாட்டில் ஜீவாவுக்கு கேடயம் வழங்கிய போது ஸ்ரீ. கு. காமராஜரால் பாராட்டப் பெற்ற திரு நாரண துரைக் கண்ணன் எழுதிய நூல்களை வெளியிடவும் அவரை ஆதரிக்கவும் அவரது நீண்டகால தமிழ்ப் பணிக்கு நன்றி செலுத்தவும் ஸ்ரீகாமராஜர் தலைமையில் முதலமைச்சர் பக்தவத்சலம், தவத்திரு குன்றக் குடி அடிகளார், ஜெமினிவாசன், தெ. பொ. மீ. அண்ணாதுரை, முதலானோர் கொண்ட மணிவிழாக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

# தாவரங்கள் தரும் மருந்துகள்

— பேராசிரியர் பி. தோகின் —

உலகிலுள்ள எந்த ஒரு செடிக்கும் வியப்புமிக்க குணங்கள் பல உண்டு. உதாரணமாக, பிர்ச், ஓக், காராண்ட் போன்ற ஏதாவது ஒரு மரத்தின் இலைகளைத் துண்டு துண்டாக்கி வெட்டி, அதன் அருகில் நோய்க் கிருமிகள்கொண்ட ஒரு திவலை நீரை வைத்தால், 5-15 நிமிடங்களுக்குள் நோய்க்கிருமிகள் இறந்துவிடுகின்றன. உள்ளி அல்லது குதிரை முள்ளங்கியை அரைத்துவைத்தால் அதனருகிலுள்ள பாக்டீரியாக்கள் வெகு விரைவிலேயே இறந்துவிடுகின்றன. வயிற்றுப்போக்கு, விஷக் காய்ச்சல் இவற்றுக்குக்காரணமான கிருமிகளை, ஓக் இலைகள் தொலைவிலிருந்தே கொன்று விடுகின்றன. வெள்ளை பிர் மரத்தின் இலைகள், டிப்தீரியா கிருமிகளைக் கொன்றுவிடுகின்றன.

உயிர்களை அழிக்கும், தாவர கிருமி நீக்கிகள் செடிகளின் திசுக்களிலும், சாற்றிலும் உள்ளன. இவற்றில் சில ஆவியாகி, காற்று, நிலம், நீர் இவற்றுடன் கலக்கின்றன.

தாவரங்களின்இந்த அற்புதக் குணங்கள் பரிணாமத்தில் எப்படித் தோன்றி வளர்ச்சியடைந்தன? லட்சக்கணக்கான நுண் உயிர்கள், தாவரங்களின் இலைகளுக்குள் செல்கின்றன. இலைகளின் திசுக்கள், அவற்றிற்குச் சிறந்த உணவாகிவிடக் கூடும். ஆனால் இவ்விதம் நேருவதில்லை. தாவர கிருமி நீக்கிகள் இருப்பதன் பயனாக, நுண் உயிர்களின் வாழ்வு இயக்கங்கள் பலவீனப்படுத்தப்படுகின்றன. அல்லது முடிவடைந்துவிடுகின்றன. தாவரங்கள் இந்தக் கிருமி நீக்கிகள் மூலம் தங்களைத் தாங்களே கிருமி நீக்கம் செய்துகொள்கின்றன. தாவரங்களுக்கு இயற்கையாக இருக்கக்கூடிய பாதிப்பின்மையில் இது ஒரு முக்கியமான அம்சமாகும். தாவரங்களைப்பற்றி பேராசிரியர் தி. வெர்தெரெவ்ஸ்கி முன்வைத்துள்ள புதிய கோட்பாட்டின் அடிப்படை இதுதான்.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் நோய் எதிர்ப்புத் திறனுடைய, பல புதிய வகைச்செடிகளை உண்டாக்க முடியும். தாவர கிருமி நீக்கிகளின் அடிப்படையில் செய்யப்படும் தேர்வு, சிறந்த முடிவுகளை அளிக்கிறது. ஒரு செடியால் வெளியிடப்படும் தாவர கிருமி நீக்கி, மற்றொரு செடிக்கும் செயற்கைமுறையில் அளிக்கப்படுகிறது. கீவ் நகரத்து நுண் உயிரியலாளர்கள் விரிவான ஆராய்ச்சிகளைச் செய்துள்ளனர். இது போன்ற 30 கிருமிநீக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றான ''ஆரினின்'' ஆரனேரியா எனும் புல்லிலிருந்து கிடைப்பது) தக்காளியில் திட்டு நோய் உண்டாவதற்குக் காரணமானநோயூக்கிகளை அழிப்பதோடு, பழங்களின் வளர்ச்சியையும் தூண்டுகிறது.

தாவரங்கள் [illegible] வெளியிடும் இரசாயனப் பொருள்கள் மூலம்பரஸ்பரம்ஒன்றையொன்று பாதிக்கின்றன [illegible] ளர்களும், மற்றும் [illegible] ளைச் சேர்ந்த ஆய்வாளர்களும் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தப்பரஸ்பர உணர்வைப் பற்றி ஆராயும் ''பையோஸினலஜி'' எனும் புதிய துறை ஒன்று தோன்றியுள்ளது. சில செடிகள் பரஸ்பரம் நேசித்துக்கொள்கின்றன. சில ஒன்றையொன்று வெறுக்கின்றன. வேறு சில மற்றத் தாவரங்களைக் கவனிப்பதேயில்லை. [illegible], பட்டாணி, பீன்ஸ் போன்ற செடிகளின் வளர்ச்சியை வேர்ம்வுட் செடிகள் தடை செய்கின்றன. ஆஸ்பென் மரத்திலிருந்து வெளியாகும் இரசாயன ஆவி, ஓக் மரத்தைப் பாதிக்கிறது. ஆனால் ஓட்ஸ் செடிகள் வெளியிடும் இரசாயனப்பொருளோ, ஒக்ரீன் முளைத்தலைத் தூண்டுகிறது.

இந்த ஆய்வாளர்கள் பல்வேறு விவசாயப் பிரச்னைகளைப் பற்றியும் ஆராய்ந்து வருகின்றனர். கலப்பு விவசாயம் சிறந்ததுதானா? நிலத்தின் அமைப்பையும், அதன் வளத்தையும் இந்த இரசாயனப்பொருள்கள்எப்படிப்பாதிக்கின்றன? தாவரங்களுக்கு நோய் உண்டாக்கும் உயிரினங்களையும், மகரந்த சேர்க்கைக்குக்காரணமான உயிரினங்களையும் அவை ஈர்க்கின்றனவா — விரட்டி அடிக்கின்றனவா? இவை அந்தப் பிரச்னைகளில் சிலவாகும். எதிர்காலத்தில் விளைச்சலை அதிகரிப்பதற்கு இந்தப் பொருள்கள் உதவும் என்று எதிர்பார்க்கலாம். எனினும் இப்பொருள்களின் செயலை ஒரேயடியாக உயர்த்திக் கூறிவிட முடியாது. உண்ணுதல், சுவாசித்தல் போன்ற முக்கியமான வாழ்க்கை இயக்கங்களின் மூலம் தாவரங்கள் ஒன்றோடொன்று மிகச் சிக்கலான முறையில் இணைந்துள்ளன. தாவர கிருமி நீக்கிகளின்மூலம் மட்டும் இந்த உறவை விளக்கிவிடமுடியாது.

காடுகள், புல்வெளிகள் முதலியவற்றில் இன்னும் எத்தனையோ புதிர்கள் மறைந்துகிடக்கின்றன. பைன் ஸெடார் காடுகள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தபோதிலும் அவற்றின் வாயு மண்டலத்தில் கிருமிகள் இருப்பதில்லை. ஒரு ஹெக்டர் பரப்பில் வளரும் பைன் மரங்கள் நாள்தோறும் 4—30 கிலோகிராம் ரசாயன ஆவியை வெளிவிடுகின்றன. இதைக் கொண்டு ஒருபெரும் நகரத்தையேகிருமி நீக்கம் செய்யலாம்.

தாவரங்களின் இந்தக் குணங்கள் மருத்துவத்துறையில் பல புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. வீட்டுக் காற்றைச் சுத்தம் செய்வதற்கு மரக் கோந்துகளைப் பயன்படுத்தும் பழையவழக்கம் மீண்டும் கைக்கொள்ளப்படலாம்.


புதிதாக தருவித்திருக்கிறோம்

● இந்தியன் பிரின்டெட் டெக்ரோன் சேலைகள்
6 யார் விலை ரூபா 24/-

● கையினால் பிரின்ட் செய்த டெக்ரோன் சேலைகள்
மனதைக் கவரக்கூடிய உடல் பூரா டிசைன்களிலும் போடர் டிசைன்களிலும்
விலை ரூபா 32-50 தொடக்கம் 37-50 வரை

● பிளெயின் டெக்ரோன் சேலைகள்
கண்கவர் குஞ்சத்துடன் 20க்கு மேற்பட்ட கவர்ச்சிகரமான நிறங்களில்
விலை ரூபா 32-50

● ஜப்பான் ஜோர்ஜெட் சேலைகள்
அழகிய ரோஸ், நீலம், மஸ்டெட், ஒரேஞ், பிரௌன், இளம் நீலம், இளம் கத்தரிப்பூ நிறங்களில்
6 யார் ரூபா 24-24

கைவசம் குறிப்பிட்ட இருப்பு மட்டுமே உண்டு

டயறம்ஸ்

54, பெரிய தெரு. யாழ்ப்பாணம்.



ஜப்பான் றேயன் சூட்டிங்ஸ் 28"
யார் ரூபா 4/- மட்டுமே

ஜப்பான் றேயன் சூட்டிங்ஸ் 28"
விசேஷ ரகம் யார் ரூபா 6-50 மட்டுமே

டயறம்ஸ்

54, பெரிய தெரு யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எந்தரக மனிதர்?

## உங்கள் குணத்தை அறிய 20 கேள்விகள்

— மனோகரன் மயில்வாகனம் —

ஒவ்வொரு மனிதனும் நல்ல குணங்களும், கெட்ட குணங்களும் வாய்ந்தவனாகவே இருக்கிறான். ஒரு மனிதனின் இயற்கையான குணத்தை மாற்றுவது கஷ்டம். ஒவ்வொரு மனிதனும் தனது இயற்கையான குணத்துக்கேற்ப நடப்பதே சிறப்புடைத்தாகும்.

ஆனால் அதற்கு, முதலில் ஒவ்வொருவரும் தனது அடிப்படைக்குணதிசயங்களை ஓரளவாவது அறிந்திருக்கவேண்டும்.

கீழே 20 ஆழமான கேள்விகளை அளித்துள்ளோம். ஒவ்வொன்றிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளுண்டு. இதில் எந்தப் பிரிவில் நீங்கள் அதிக பதில்கள் அளிக்கின்றீர்களோ, அந்தப் பிரிவுக்குரிய குணசித்திர ரகத்தையே நீங்கள் சார்ந்தவர்களாவீர்கள்.

கேள்விகளின் முடிவில், நான்கு குணசித்திர ரகங்களும் தரப்பட்டுள்ளன. சிறு சிறு வித்தியாசங்கள், பேதங்கள் இருப்பினும், பெரும்பாலும் மனிதர்கள் இந்த நான்கு பிரிவுகளில் ஒன்றினையே அதிகம் சார்ந்தவராய் இருக்கமுடியுமென உளவியல் வல்லுனர் ஒத்துள்ளனர்.

நீங்கள் எந்த ரகம்? பரீட்சித்துப் பாருங்கள்!

எல்லாக் கவலைகளையும் மறந்து, நீங்கள் விரும்பியபடிஎதையும்செய்ய இரண்டு மணித்தியாலங்கள் அவகாசம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. நீங்கள் அப்போது:

அ) வெளியே உலவச் செல்வீர்களா?

(ஆ) நண்பரை விஜயம் செய்வீர்களா?

(இ ஒருபுத்தகம் அல்லது சில சஞ்சிகைகளை வாசிக்க அமர்வீர்களா?

ஈ குறையாகவுள்ள தொட்டாட்டு வேலை ஏதாவதைச் செய்து முடிக்கப் பார்ப்பீர்களா?

2 நீங்கள் நண்பர்களைப் பிடிப்பது:

(அ) உடனடியாகவா?

(ஆ) 'வந்தால்வாபோனாற் போ' என்ற ரீதியிலா?

(இ கஷ்டத்துடன்தானா?

(ஈ உங்களுக்கு அவசியமான நேரத்தில் தானா?

3. விளையாட்டின் மீது உங்கள் பிரியம்:

அ இலேசானதா?

(ஆ மிகக்கடுமையானதா?

(இ) துப்புரவாகஇல்லையா?

(ஈ இடையிடையேதானா?

4. நீங்கள் பணத்தைக் கையாள்வது:

அ) தந்திரமாகவும், பிரயோசனமாகவும், வழக்கமாக லாபகரமான முறையிலுமா?

(ஆ) அவ்வளவுநல்லமுறையில் இல்லையா?

(இ மிகஅவதானமாகவா?

(ஈ) சில சமயங்களில் அளவுக்கு மிஞ்சிச் செலவழித்தாலும், ஓரளவு நல்ல முறையிலா?

5. கடந்தகாலம் என்பது

(அ உங்கள் நோக்கில் சிறிய இடம் மட்டும் பெறுவதா?

(ஆ) முடிந்து, ஒழிந்த கதையா?

இ படித்துப் பயன்பெற வேண்டியதொன்று?

ஈ) பெரும்பாலும்கவர்ச்சிகரமானதா?

6. எதிர்காலம் என்பது

(அ இங்கு இப்போதிருந்தே செயலாற்றப்பட வேண்டியதா?

(ஆ) பரபரப்பானது-இன்னும் ஒரு சில நாட்களுக்கு மட்டுமா?

(இ; அதிகம் சிந்திக்கப்படாது விட வேண்டியதொன்று?

(ஈ) தொடு வானத்தில் கார்மேகம் தோற்றுதவரை-மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்க வேண்டிய தொன்று?

7. உணவு உங்களுக்கு:

அ) வாழ்க்கையின் பல சிற்றின்பங்களில் ஒன்று?

ஆ) 'சப்'பென்று இருக்கிறதா?

(இ) மிகவும் மகிழ்ச்சிகரமானதா?

(ஈ) மகிழ்ச்சி தருவதன்றி, அதற்கு மேலில்லையா?

(8) நீங்கள் மது அருந்துவது:

(அ) வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்ட உதவுகிறது என்பதாலா?

(ஆ) பெரும்பாலும் மற்றவர்கள் செய்கின்றார்களே என்பதனாலா?

(இ) மிகுந்த மகிழ்ச்சியுடனா?

(ஈ) சில சமயங்களில், அல்லது துப்புரவாக இல்லையா?

9. நீங்கள் ஜோதிடம்:

அ) குப்பை என எண்ணுகிறீர்களா?

(ஆ உண்மை இல்லாவிட்டாலும், பொழுதுபோக்குக்கு உதவுமெனக் கருதுகிறீர்களா?

இ) ஏதாவது சரக்கு இருக்குமென நம்புகிறீர்களா?

(ஈ உங்கள் வாழ்க்கை நோக்கிற்கு அப்பாற்பட்டதொன்று?

10. மதம் உங்களுக்கு:

(அ) வெறும்மூட நம்பிக்கையா?

ஆ) இருக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரியவில்லையா?

(இ) ஓரளவு உண்மை உள்ளதா?

(ஈ) கஷ்டமான காலங்களில் சக்தி தரவல்லதா?

11. காலநிலை உங்கள்மன நிலையைப் பாதிக்கிறதா?

(அ) இல்லவே இல்லையா?

(ஆ) நீர் அவதானித்ததாகத் தெரியவில்லையா?

இ) ஏறத்தாழ எப்போதுமேயா?

(ஈ) சில சமயங்களில், நிச்சயமாகவா?

12. நீங்கள் கவலைப்படுவது:

(அ) ஒரு போதுமே இல்லையா?

ஆ இடையிடையேயா?

இ) ஓரளவு தேவைக்கதிகமாகவா?

(ஈ) அபரிமிதமாகவா?

13. நீங்கள் மற்றவர்களுடன் சுமுகமாகப்பழகுவது;

அ) எப்போதுமேயா?

(ஆ) வழக்கமாகவேயா?

(இ) மற்றும் சிலர் போல் அவ்வளவு சுமுகமாகவில்லையா?

(ஈ) சராசரியாகவா?

14. அன்பு உங்களுக்கு:

(அ) மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக்கூடியது, பிரயோசனமானதும் கூட. ஆனால் வாழ்க்கையின் ஓர் அம்சமேயா?

(ஆ) வெறும் கிளுகிளுப்பா?

(இ) வாழ்க்கையின் சிக்கலான அடிப்படையா?

(ஈ சாலம் பிரதானமா?

15. மற்றவர்கள் உங்கள் ஆலோசனையை

(அ) பெரும்பாலும் கேட்கிறார்களா?

ஆ) இருந்து விட்டுப் போதுமா?

(இ) எப்போதுமேயா?

(ஈ) தாங்கள் உண்மையான கஷ்டத்தில் இருக்கும் போது மட்டுமா?

16. மற்றவர்கள்உணர்ச்சி வசப்படுவது:

(அ) உங்களுக்கு எரிச்சலை ஊட்டுகிறதா?

(ஆ) உங்களுக்கு அதிர்ச்சி தருகிறதா?

(இ இயற்கையின் பாற்பட்டது எனத் தோற்றுகிறதா?

(ஈ) அனுதாபமடையச் செய்கிறதா?

17. நெருக்கடியான நிலைமையொன்றில் நீங்கள் எப்படிப்பட்டவர்?

(அ) அந்த நேரத்தில் அங்கு கிடைக்கக்கூடிய சிறந்த நபர் நீங்களேயா?

(ஆ) உற்சாகமானவர் ஆனால் உணர்ச்சிவசப்படக் கூடியவரா?

(இ) அவ்வளவு சக்தியளிக்காவிட்டாலும், அமைதியைக் கடைப்பிடிப்பவரா?

(ஈ) பிரயோசனமேயற்றவரா?

18. நீங்கள்:

(அ வேலை செய்வதற்காக வாழ்கிறீர்களா?

(ஆ வாழ்வதற்காக வேலை செய்கிறீர்களா?

(இ) நீங்கள் விரும்பிய வேலையை அல்லது தொழிலைத் தேர்ந்தெடுத்த பின், வேலையே மகிழ்ச்சி என்று கருதுகிறீர்களா?

(ஈ) இயலுமட்டும் வேலையைத் தவிர்ப்பவரா?

(19 மற்றவர்களுடன் உங்கள் தொடர்புகள்:

(அ) நீங்கள் அதிகாரத்தில் இருந்தால், சுலபமாகவிருக்கிறதா?

(ஆ இடையிடையே மாறினாலும், பொதுவாகச் சந்தோஷமானதா?

(இ ஏறத்தாழ எப்போதுமே கஷ்டமானதா?

ஈ) வேறு யாராவது அதிகாரத்தில் இருந்தால், சுலப

(10ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கியம் டீச்சரின் கை ஒருகடதாசியை எடுக்கிறது. மற்றொரு கை பேனையைத் திறந்து எழுதுகிறது.


இச்சமயம் பாடசாலைப் பியூன் ஒருகவரைக்கொண்டு வந்து பாக்கியம் டீச்சரிடம் கொடுக்கிறான்.

அது ஒரு தந்தி. அதை டீச்சரின் கைகள் பிரித்தன. கண்கள் படிக்கின்றன.

'விவாகரத்துக்கு நீதிமன்றத்தில் அனுமதி கோருகிறேன். - மூர்த்தி'

பாக்கியம் டீச்சர் மூர்ச்சித்து நாற்காலியில் சரிகிறாள். முகுந்தனின், 'டீச்சர், டீச்சர்' என்ற குரல் பாக்கியம் டீச்சரின் காதில் விழவில்லை. அதுபக்கத்து வகுப்பு டீச்சரையும் பிள்ளைகளையும் அங்கேகொண்டுவந்து சேர்க்கிறது.

(யாவும் கற்பனை)


ஆட்டமும் பாட்டமும் நிறைந்தவள்

உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியம், வலிமை, மகிழ்ச்சி நீங்களும் கொடுக்கலாம்.

ஒரு குழந்தையின் உடல் உற்சாகமாக வளர்வதற்கும், கண்பார்வை தெளிவாக இருப்பதற்கும் வேண்டியது வைட்டமின் 'ஏ'. பலமுள்ள எலும்புகளுக்கும், உறுதியான பற்களுக்கும் வேண்டியது வைட்டமின் 'டி'. வைரமான சதைக்கும், களங்கமற்ற சருமத்துக்கும் வேண்டியது வைட்டமின் 'ஸி'. உங்கள் குழந்தைகளுக்கு இவ்வைட்டமின்கள் கிடைப்பதற்கு நிச்சயமான வழியொன்றுண்டு. அதாவது, அவர்கள் தினமும் "ஹலிபொரேஞ்" அருந்த வேண்டும்.

உண்மையில், வாழ்நாள் முழுவதும் சலதோஷம், தொற்று நோய்கள் வராதபடி எதிர்க்கும் சக்தியை உடம்புக்கு அளிப்பவை 'ஹலிபொறேஞ்'சில் அடங்கியுள்ள மூன்று பாதுகாப்பு வைட்டமின்களே



ஹலிபோரேஞ்

உற்சாகமான வளர்ச்சிக்கும், உறுதியான விருத்திக்கும்

இது கிளாஸ்கோ-அலன்பறீஸ் (சிலோன்) லிமிட்டெட்டின் தயாரிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# அப்பா

— “ ஸ்ரீரங்கன் ” —

கையில் வைத்திருந்த அடிமட்டத்தினுல் மேசை மீது இருதடவைகள் தட்டி ஓசை எழுப்பிவிட்டு, அமைதியாக இருங்கள் பிள்ளைகளே என்று குரல் கொடுத்தார் பாக்கியம் டீச்சர்.

வாங்கின் மீது ஏறி நின்று கடித்துச் சுவைத்த இனிப்பில் ஒருதுண்டுக்காகச் சண்டைபிடித்துக் கொண்டிருந்தவர்களும், ‘என்ரை புத்தகத்தை விடு’ என்று உச்சஸ்தாயியில்கூச்சல்போட்டு ஏற்கனவே கசங்கி நைந்து உருவம் மாறிப்போன புத்தகத்துக்கு இழுபறிப் பட்டுக்கொண்டிருந்தவர்களும் மேசை மீதுஅடிமட்டம் எழுப்பிய ஓசையையும் அதைத் தொடர்ந்து பாக்கியம் டீச்சரின் வாயிலிருந்து வெளிவந்த சத்தத்தையும் கேட்டு பெட்டிப் பாம்பாக அடங்கினர்.

இந்த அமைதியும் கட்டுப்பாடும் அதிக நேரத்துக்கு நீடிக்கமாட்டாதென்பது டீச்சருக்குத் தெரியும். டீச்சரின் கோபம் நீடிக்காதென்பது பிள்ளைகளுக்கும் தெரியும்.

பரீட்சைப் பேப்பர்களைப் பார்த்து புள்ளிபோடவேண்டிய வேலை நிறைய இருக்கிறது. பாடசாலை விடுமுறை விடுவதற்கும்நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. பரீட்சைப் பேப்பர்களை வீட்டில் திருத்திப் புள்ளிகள் போடலாமென்றல் பாக்கியம் டீச்சரின் பிள்ளைகள் தனக்கும் பேப்பர்களுக்கும் சேர்த்து புள்ளிகள் போட்டு விடுங்கள். வகுப்பில் வைத்துப்புள்ளிகள்போடுவது இந்தப் பிள்ளைகள் மத்தியில செய்யக் கூடிய வேலையா? தனது மூன்று குழந்தைகளை சமாளிக்கமுடியாத டீச்சர் வகுப்பில் முப்பது பிள்ளைகளை எப்படிச் சமாளிப்பது?

பிள்ளைகளுக்கு வேலை கொடுத்தால் சிறிது நேரம் நிம்மதியாகத் தனது வேலைகளைச் செய்யலாம்.

“பிள்ளைகளே, எல்லோரும் உங்கள் கொப்பிகளை எடுங்கள்”

டீச்சர் வார்த்தையை முடிக்கவில்லை. “எடுத்துவிட்டோம்டீச்சர்” கடைசி வாங்கில் தனி ஆவர்த்தனமாக ஆரம்பித்தபதில் முன் வாங்கில் கோஷ்டிகானமாக முடிவெய்தியது.

“சரி.சரி. சத்தம் போடாமல் உங்கள் ‘அப்பா’ வைப் பற்றி பத்து வசனங்கள் எழுதுங்கள்”

“சரி டீச்சர்”

பரீட்சை விடைத்தாள் கட்டை அவிழ்த்து மேசை மீது விரித்து வைத்து முதல் பேப்பரில் கண்ணைப் பதித்த பாக்கியம் டீச்சரின் கண்களுக்கும்பரீட்சைப் பேப்பர்களுக்கு மிடையில பிஞ்சுக்கரம் ஒன்று கொப்பியை நீட்டிப் பிடித்தது. நிமிர்ந்து பார்த்த டீச்சர் முன் முகுந்தன் நின்முன்.

“முகுந்தன் முதலாள் தான்.” டீச்சரின் வாய் இப்படிச் சொன்னலும் தன்னை வேலைசெய்ய விடமாட்டான் போலிருக்கிறதேஎன்றசலிப்பும் உள்ளத்தில் எழாமலில்லை.

முகுந்தனின் கையிலிருந்து கொப்பியை வாங்கிப் பார்த்த டீச்சரின் கண்களின் பார்வை மங்கின, தலைசுழன்றது, முகமெல்லாம் விறுவிறுத்தது. நாற்காலியிலிருந்து பூமியில் அதலபாதாளத்தை நோக்கி உருண்டு விழுந்து கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை.

ஒரேயொரு கணம் தான். டீச்சர் சுதாரித்துக் கொண்டார். கொப்பியை மேசை மீது வைத்து விட்டு, நடுங்கும் கரங்களால் கைக்குட்டையை எடுத்து முகத்திலரும்பிவழிந்தவியர்வையைத் துடைத்துக் கொண்டார். பங்கியகண்களை டீச்சரின் இடது கையின் கட்டை விரலும் நடுவிரலும் இருகரைகளிலிருந்தும் மூக்கின் நடுமேடுவரை வருடி கண்ணுடி மீது மங்கலைத் துடைப்பது போல் துடைத்துக் கொண்டிருந்தன. தன்னை முகுந்தனே மற்றும் பிள்ளைகளோ கவனித்து உணர்ந்து கொள்ள மாட்டார்களென்பது டீச்சருக்குத் தெரியும். ஆனலும் முகுந்தனையும் பிள்ளைகளையும் நோட்டம் விட்ட டீச்சர் எதிரேயுள்ள வகுப்பிலிருந்துசக ஆசிரியர் யாராவது தனது ‘அவதி’யை கவனித்துவிட்டார்களோ என்ற அச்சத்துடனும் நாணத்துடனும் சுற்றுப் புறமெங்கும் நோட்டம் விட்டார்.

‘முகுந்தன் நீ போய் வாங்கில் இரு, பிறகு கூப்பிடுகிறேன்’

முகுந்தன் தனது இருப்பிடத்துக்குப்போய்விட்டான்.

முகுந்தன் எழுதியஎழுத்து மேசை மீது விரித்தபடி கிடந்த அவனது கொப்பியிலிருந்து டீச்சரின் கண்களை மட்டுமல்ல கருத்தையும் இழுத்துக்கொண்டிருக்கிறது.

பாக்கியம் டீச்சர், மெதுவாக தனது தலையைக் குனிந்து அவன் எழுதியவற்றை மீண்டும் கண்ணுல் பார்க்கிருர்.

‘எனக்கு அப்பா இருக்கிருர். நான் பார்த்ததில்லை. எனக்குஅவரைத்தெரியாது’

இதுதான் முகுந்தன் என்கிற அந்த எட்டு வயதுக் கெட்டிக்காரப் பயல், எல்லோருக்கும் முன் எழுதி முடித்த வியாசம்.

அவன் தன்னை நினைந்து எழுதினுனே, என்ன நினைந்து எழுதினுனே தெரியாது. ஆனல் பாக்கியம் டீச்சர் தன்னைநினைந்து வருந்தினர், தன்னை நினைத்துக்கொண்டார்.

தன்னை மறந்து பரீட்சைத் தாளில் புலனைச் செலுத்த முகுந்தனின் வியாசம் டீச்சரை விடவில்லை.

மீண்டும் முகுந்ததனின் வியாசத்தையே பார்க்கிருர்.

தனது கைப் பையைத் திறந்து ஆறுமாதங்களாக அதற்குள் தஞ்சம்புகுந்து கிடக்கும் கடிதத்தை அமைதியாக எடுத்துப் படித்துப் பார்க்கிருர். கடிதம்மீண்டும் கைப்பைக்குள் புகுந்து விடுகிறது. இது எத்தனையாவது தடவையோ.

பாக்கியம் டீச்சருக்கு இளம் வயதுதான். இருபத்தைந்தைக்கூடத் தாண்டியிருக்காது. மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாலும் கணவன் மூர்த்தியுடன் நிம்மதியாக, நிரந்தரமாக சேர்ந்து வாழ்ந்த நாட்கள் மிகமிகக் குறைவு. தாய் தந்தை, அண்ணன், தம்பி, வீடு, நிலம், சொத்து, சுகம்... இத்தனைக்கும் பாக்கியம் டீச்சருக்குக் குறையெதுவுமில்லை. ஆனல்... கணவன் மூர்த்தி.

கொழும்பில் ஒரு பிரபல பிரிட்டிஷ் வர்த்தகக் கம்பனியில் பெரிய பதவியிலிருக்கும் மூர்த்திக்கு கைநிறையச் சம்பளம் வருகிறது. வாட்ட சாட்டமாக, கண்ணுக்கு அழகாக எந்நேரமும் புதுமாப்பிள்ளைபோல் இருப்பான். அன்புள்ளம் கொண்டவன் தான். ஆனல் சற்று முற்கோபி. பிடிவாதக்காரனும்கூட. யாருடனும் அன்பாகவும் ஆதரவாகவும் பேசிக் கொண்டிருப்பான். திடீரென்று பட்டாசுவெடித்ததுபோல் சீறி எழுந்துவிடுவான். இது அவன் பிறவிக்குணம். அவனுக்கு எப்பொழுது கோபம்வரும், எப்பொழுது சாந்தம் வரும் என்று யாருமே கூறமுடியாது.

யாருமென்ன அவன் மனைவி பாக்கியத்துக்கே இது தெரியாது. ‘பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்ற’ அவர்களது திருமணம் சகல சிறப்புக்களோடும் முடிவடைந்த மூன்ரும்நாள், விருந்தினர்கள்கூட அங்கிருந்து போய்முடியவில்லை, தன்னுடன் கொழும்புக்கு அன்றே புறப்பட வேண்டுமென்று பாக்கியத்திடம் மூர்த்தி [illegible]

சரி, சரி, இப்பவே புறப்படு. இண்டைக்கே கொழும்புக்குப் போகவேண்டும்.”

மூர்த்தி வெளிவராந்தாவுக்குச் சென்று ஒரு சாய்வு நாற்காலியில் சரிந்துகொண்டான்.

பாக்கியத்துக்கு அழுகை அழுகையாக வந்தது. என்ன செய்வதென்ற கலக்கம்.

அம்மா, அப்பா, அண்ணன் தம்பி, விருந்தினர் ஒருவர் ஒருவராகவந்து அவளிடம் ‘நிலைமையை’ அறிந்து கொள்ள முயன்றுகொண்டிருந்தனர்.

‘மாப்பிள்ளை மிடுக்கு’ என்ருர் ஒருவர்.

“இவனை நம்பி எப்படி என்ரை பிள்ளையை கண்காணுத இடத்துக்கு அனுப்புகிறது” என்று அவனைநம்பி அவனுக்குத்தன் மகளைமட்டுமல்ல வீடுவாசல், நகைநட்டு அனைத்தையும் தாரைவார்த்துக்கொடுத்த பாக்கியத்தின் தந்தையார் முணு முணுத்தார்.

முணுமுணுப்பு, சலசலப்பு ஓய்ந்தது. மூர்த்தியும் பாக்கியமும மாலையில் கோயிலுக்குச் சென்று வந்தனர்.

மூர்த்தியை அவள் புரிந்து கொண்டாள்.

அவனின் ‘லீவு’ நாட்கள் முடிந்ததும், தாய் தந்தையரின் கணகள் கலங்கினுலும் பாக்கியம் தனது கணவன் மூர்த்தியுடன் கொழும்புக்குப்போனுள்.

இ[...]ழும்பும் யாழ்ப்பாண[...]மாக மூர்த்தி - பாக்கிய[...]ரும் பாக்கியத்தின் கண் முன் நிற்கிறது.

மணப் பெண்ணிடம் மாப்பிள்ளை முதலில் எப்படி அன்பாகவும் ஆசையாகவும் பேசுவாரோ அதேபோல் தான் மூர்த்தியும் பாக்கியத்துடன் பேசிக்கொண்டிருந்தான். பேசிக்கொண்டிருந்தான் என்பதைவிட ‘செல்லம் பொழிந்து’ கொண்டிருந்தான் என்று சொல்லலாம்.

‘எனது லீவு முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கின்றன. இந்த ஒரு வாரத்தையும் இங்கே கழித்துவிட்டு நாங்கள் கொழும்புக்குப்போவோம். அங்கு புதிதாக வாடகைக்கு ஒரு வீடு எடுத்திருக்கிறேன். ஒரு வாரம் அங்குமிங்கும் ‘ஜாலி’யாகத் திரிந்துவிட்டு புதுக்குடித்தனம் ஆரம்பிப்போம்.

மூர்த்தியின் கொஞ்சலை ‘ம்’ போட்டபடி கேட்டுக் கொண்டிருந்த பாக்கியம்,

‘இப்பவே கொழும்புக்கு அனுப்ப அம்மாவும் அப்பாவும் விடாயினம். லீவு முடிந்து நீங்கள் போயிற்று அடுத்தமுறை வந்ததும் நானும் வரலாம்’ என்ருள்.

மூர்த்தி ருத்திர மூர்த்தியானுன்.

“அம்மா, அப்பா விடமாட்டினமோ! ஹு ஊம். அவங்களோ எனக்குப்பெண்டாட்டி.”

பாக்கியம் திகைத்துப் போனுள். மூர்த்தியின் முகத்தைப் பார்க்கவே அவளுக்கு நடுக்கமெடுத்தது. ‘ஐயோ, சத்தம் போடாதேயுங்கோ’ அவள் மெதுவாகத்தான் சொன்னுள்.

“சத்தம் போடவேண்டாமாம். அவஎனக்குச்சொல்ரு.

தம்பதிகளின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. மூர்த்தியை குழந்தையாகவும் விளையாட்டுப்பிள்ளையாகவும் பார்த்து அனுபவித்த பாக்கியம், அவனைப் பலதடவைகளில் ருத்ர மூர்த்தியாகவும் பார்த்துப் பழகிவிட்டாள். அவன் கோபமும் பிடிவாதமும் நிலையற்றவை என்பதையும் அவள் அறிந்து கொண்டாள்.

சிந்தனையில் மூழ்கிவிட்ட பாக்கியம் டீச்சரின் முன், முகுந்தன் மீண்டும் வந்து நிற்கவே சிந்தனை கலைந்தது. முகுந்தனுடன் தனது மூன்று பிள்ளைகளையும் ஒப்பிட்டு நினைத்தது பாக்கியம் டீச்சரின் மனம்.

“முகுந்தா”

‘என்ன டீச்சர்’

“உன்ரைஅப்பா எங்கே?”

‘எங்கேயோ இருக்கிருராம்’

“உனக்கு எப்படித் தெரியும்?”

‘வீட்டில ஆச்சி சொல்லுவா?’

“எப்படிச் சொல்லுவா?”

‘உன்ரை அப்பனும் ஒரு மனுஷனே எண்டு பேசுவா?’

அம்மா பேசுவாவோ?”

‘இல்லை அப்பாவைப் பற்றி ஆசசி பேசினு, அம்மா ஆச்சியைப் பேசுவா’

“அப்பாஏன் வாறதில்லை”

‘அம்மாவை ஒருநாள் அப்பா பேசினுராம். அப்பாவைஆச்சி பேசிப்போட்டாவாம். அதுக்குப்பிறகு அப்பா வேறகலியாணம் கட்டிக் கொண்டாராம்’

பாக்கியம் டீச்சரின் நெஞ்சில் பாருங்கல்லைத் தூக்கிப் போட்டதுமாதிரி இருந்தது முகுந்தனின் இந்தப்பதில்.

மூன்ருவது குழந்தை பிறந்த ஒரு மாதத்தின்பின் திடீரென வீட்டுக்கு வந்த மூர்த்தி அன்றே கொழும்புக்கு வருமாறு தன்னை அழைத்ததையும் தான் பதில் சொன்னதும் அவன் வழமைபோல் கோபம்கொண்டு துள்ளியதும் ஒரு நாளுமில்லாத திருநாளாகத் தனதுதந்தை, மகளுக்காக மாப்பிள்ளையை எதிர்த்துப்பேசியதும் பாக்கியம் டீச்சரின் நினைவில் தோன்றின.

பெண்ணைப் பெற்றவர் தனக்குப் பெண்ணைக் கொடுத்தவர் தன்னைப்பேசுவதாவது? ஆண்பிள்ளைக்கு ரோஷம் வந்துவிட்டது. ‘உமது மகளை நீரே வைத்திரும்’ ஆத்திரத்துடன் பதில் சொல்லிவிட்டு மூர்த்தி வெளியேறினுன்.

மூர்த்தியைப் புரிந்து கொண்டதாக நினைத்திருந்த பாக்கியம் ‘கோபம் தணிந்ததும் அவர் வருவார்’ என்று தான் எண்ணினுள்.

நாட்கள் மாதங்களாகின.

ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது.

மீண்டும் கைப்பையைத் திறந்து பல தடவை படித்த அந்த கடிதத்தை எடுத்த பாக்கியம் டீச்சர் கடிதத்தின் கடைசிவரிகளை திரும்பத் திரும்பப்படித்தார்.

“.... அப்பாவும் அம்மாவும் உன்னைப்பெற்று வளர்த்தவர்கள். உனக்கு அவர்கள் தான் தேவை என்ருல் நீ என்னை மணம்செய்திருக்க வேண்டியதில்லை. இனியும் நான் தனிமையின் வேதனையை அனுபவிக்க முடியாது. இனி உன்விருப்பம்”


—மூர்த்தி.

முகுந்தனையும் கடிதத்தையும் பாக்கியம் டீச்சரின் கண்கள் மாறி மாறிப்பார்க்கின்றன. முகுந்தனின் இடத்தில் தன் மூன்று குழந்தைகளும் நிற்பதாகவும் முகுந்தன் வீட்டில் அவனை ஆச்சி பேசுவதுபோல் தனது தந்தை பிள்ளைகளைப் பேசுவது போலவும், தந்தையும் தானும் வாக்குவாதப்படுவது போலவும் பாக்கியம் டீச்சரின் மனதில் திரைப் படம்போல் நிழலாடுகிறது!

(4ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டரிடாயும், ஜெயசங்கரும் இப்படித் தோன்றுவது கௌரி கல்யாணத்துக்காகத்தான்!

என் பெங்களூர்

# மாப்பிள்ளை ரொம்ப அழகாக இருக்கிறார்!

'கன்னடத்து பைங்கிளி' கூறுகிறார்



பெங்களூரில் கிறிஸ்தவ பள்ளியில் படிக்க ஆரம்பித்தேன். அங்கே ஆசிரியைகள் எல்லாம் 'ஸிஸ்டர்ஸ்' என்று அழைக்கப்படும் கன்னிகளே! சில சமயங்களில் நானும் எண்ணுவேன். கல்யாணம் குடும்பம் இவையெல்லாம் இல்லாமல் நானும் இவர்களைப் போல் ஒரு 'கன்னி' யாகி விடக்கூடாதா? வீட்டிலே இதை எப்படிச் சொல்வது. மனதிற்குள் எண்ணிக் கொள்வதோடு சரி! சொல்ல தைரியம் வந்துவிட்ட இந்த நேரத்திலோ அந்த எண்ணம் மாறிவிட்டது. நான்படித்துக் கொண்டிருக்கும் போதே சினிமாவில் நடிக்க சான்ஸ், கிடைச்சுது. ஒரு பிரச்னை எழுந்தது. சினிமாவில் நடிப்பதானல் பள்ளிக்கு போக முடியாது! என்னகாரணம் சொல்லி விட்டு பள்ளியிலிருந்து நிற்பது?


வீட்டில் எல்லாரும் ஒரு காரணத்தை தேர்ந்தெடுத்து அதையே, பள்ளியில் சொல்லிவிட்டு வரும்படி சொன்னார்கள். நான் தலைமை ஆசிரியரிடம் சென்றேன். ''நான் பள்ளியிலிருந்து நின்று கொள்ளப் போகிறேன்'' என்றேன். ''ஏன் படிப்பின் மீது கோபமா? நீ தான் நன்றாகப் படிக்கிறாயே'' என்றார் தலைமை ஆசிரியை. ''இல்லை எனக்குக் கலியாணம் ஆகப் போகிறது!'' என்று நாக் குழறச் சொன்னேன். ''வாட் மேரேஜ் டு யூ! அதுவும் இந்த சிறுவயதிலேயா?'' என்று கேட்டு விட்டு அதிசயத்தோடு பார்த்தார். கல்யாணம் என்று சொன்னதும் அவர்தான் வேறு என்ன சொல்லமுடியும்? என் தோழிகள் எல்லாம் என்னை கலாட்டா பண்ண ஆரம்பித்து விட்டார்கள். பள்ளியில் எனக்கு ஏகப்பட்ட தோழிகள். நான் தொண்ணூற்றெட்டுப் படங்களில் நடித்து முடித்துவிட்டேன். இன்னும் சில மாதங்களில் நூறில் ஒருத்தியாகிவிடுவேன். நூறு படங்களில் நடித்த பெருமை எனக்கு வந்துவிடும். பள்ளியில் இருந்து வெளியேறி இத்தனை படங்களில் நடித்த பின்புதான் எனக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. நானும் தாயாரும் பெங்களூர் சென்று மாப்பிள்ளையைப் பார்த்தோம். அவர் ரொம்ப அழகாக இருக்கிறார். எனக்குப் பிடித்திருக்கிறது.



எங்களையெல்லாம் விட்டுப்போவதற்கு எப்படிந்நான் உனக்கு துணிச்சல் வந்தது? சொந்தப் பிள்ளைமாதிரியல்லவா வளர்த்தோம் - என்று நாகேஷிடம் பத்மினி கூறுவது பால்ஸ் கம்பெனியாரின் பெயரிடப் படாத படத்திற்காகத்தான்.

பரபரப்பான

## தகவல்கள்



பெற்றதகப்பன் குற்றம் செய்தாலும் அதைத் துணிந்து கண்டிக்கும் குணம் எனக்கு என்றுமே உண்டு. அந்த முறையில் ஆதிமுதல் எம். ஜி. ஆரை எனக்குத் தெரிந்திருந்தாலும், இன்று அவருடைய போக்கு கலை உலகுக்கும் நாட்டுக்கும்தீங்குபயக்கக் கூடியதாகவே இருக்கிறது.''

எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த பல படங்களில் வில்லனாக தோன்றிய பழம்பெரும் நடிகர் டி. எஸ், பாலையா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழ் துறை மீது அக்கறை கொண்ட எனக்கு அதிர்ச்சியைத் தருகிறது. அரசியல் என்பது தியாக உணர்வுள்ள அனுபவசாலிகளுக்குத் தேவை. அதிலே கலைஞன் ஒருவன் குதிப்பதும், நடிகன் நாட்டை ஆளவருவேன் என்பதும், நாட்டிற்கும் சமூகத்திற்கும் கேடான விஷயம். யார் யார் எந்தெந்த இடத்திலிருந்து எந்தெந்த வேலைகளைச்செய்யவேண்டுமோ அவரவர்கள் அந்தந்த இடத்திலிருந்து கடமையைச் செய்வதுதான் நியாயம், தர்மம், நன்மை அதைவிட்டு விடிந்தால் எழுந்தால் பவுடர்பூச வேண்டிய நடிகன் ஆட்சி நாற்காலியில் உட்கார நினைப்பது நாட்டுக்கு கேடானது. முகத்தில் பவுடரைப் பூசியதும் நடிகனின் முகம் அழகாகத்தான் தெரியும். வயதும் கூட குறைவாகத்தான் தெரியும். ஆனல்பவுடரை அழித்தவுடன் உண்மை உலகுக்குத் தெரியும். அதே போல கலைஞனின் புறவாழ்க்கை புகழோடு இருக்கும். அகவாழ்க்கையை எடுத்து அலசிப் பார்க்க ஆரம்பித்தால் அதே உண்மை மிக பயங்கரமாக இருக்கும். இ... உண்மை எம். ஜி. ஆ... குத் தெரியாததல்ல.

## ''கலைஞர்கள் பலர் பாதிக்கப்பட்டனர்''

நாடக மேடைகளில் புகுந்த அந்தக்காலத்திலிருந்து தமிழ்த் திரைப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் இன்று வரை ஒரு கலைஞனகத் தான் இருக்கிறேனே தவிர வேறு மாற்றம் எதுவும்கிடையாது. தொழில் துறையில் என்னிடம் எம். ஜி. ஆர். போட்டியில்லை. பாலையாவுக்கு நடிக்கத்தெரியாது என்று யாருமே இதுவரையில் சொன்னதில்லை. அந்த அளவுக்கு கலையுலக வாழ்க்கையில் உயர்ந்தும் வளர்ந்தும் இருப்பவன் நான். எனவே பொருமையினல் இதை நான் கூறவில்லை.

## ''தெருவிலும் வேஷம் போடுகிறார்''

நடிகர் எம். ஜி. ஆர். தன்னைத் தலைவராக எண்ணிக்கொண்டு மேடைகளில் பேசும் பேச்சு கலைத்...

எம். ஜி. ஆரை பொ... தவரையில் இவர் எல... னிலே வெற்றிபெற்... தான் தொண்டுசெ... வேண்டுமென்பதில்... இப்போதிருக்கும் நி... லேயே அதைச் செ... லாம். கலையுலகில் இ... நல்லவர். நடிகர் எ... பெயர் உண்டா? கி... யாது. இப்படியான... மக்களுக்கு நல்ல தொ... டனக இருப்பார் ... பதை நம்பமுடியாது...

எம். ஜி. ஆரை ந... கேட்க விரும்புகிறே... இதுவரையில் உண்... யான ஏழைகளுக்கு உ... னீர்களா? ஏழை நடி... கள் தொழிலில்ல... போது ஆதரவு க... னீர்ளாக? தொழிலுள்... புதிய முகங்கள் திற... யாக நடிக்கும் போ... பொருமையில்லாப... இருந்ததுண்டா?

எந்த நடிகர்களா... திறமையாக நடித்து... டார்களென்று வைத்... கொள்வோம்அந்தகா... படத்திலிருந்தால் தன்... விட நன்கு அந்த நடி... நடித்துவிட்டார் எ... மக்கள் கூறிவிடுவ... களோ என்று நினை... வஞ்சகமாக அந்தக்க... சிகளை வெட்டியெறி... சொல்லியிருக்கிறார் இ... ராமச்சந்திரன்.

தான் செட்டுக்... வரும்போது பழங்... ராஜாக்களுக்குமரியா... செய்வதைப்போல் ... யாமல் உட்கார்ந்தி... தார்கள் என்பதற்... பழிவாங்கப்பட்ட நடி... கள் கொஞ்சமா? இ... ராமச்சந்திரன் இ... அரசியலில் நடிப்ப...

பழம் பெரு...

## 'இது 20-ம் நூற்றாண்டு! நளாயினி மாதிரிப் பேசா...

### சிவாஜி விஜயாவுக்குச் சொன்ன...

'இது 20-ம் நூற்றாண்டு! நளாயினி மாதிரி பேசாதே' என்று கே ஆர் விஜயாவிடம் சொன்னார் சிவாஜிகணேசன்!

சிவா என்ற வாலிபரை கே ஆர் விஜயா காதலித்தார்! இருவருக்கும் திருமணத்தை முன்னின்று நடத்திவைத்தார் சிவாஜி கணேசன்!

### போதை ஏறியது

விஜயாவின் கணவன் பெங்களூரில் ஒரு இளம் பெண்ணுடன் சுற்றுவதைக் கண்டார் சிவாஜி! உடனே அவர்களை பின் தொடர்ந்து சென்றார் சிவாஜிகணேசன்!

ஒரு பங்களாவுக்குச் சென்று இளம் பெண்ணுடன் மேனட்டுச்சாராயம் குடித்தார் முத்துராமன்! அவருக்குப் போதை ஏறியது. அந்தப் பெண்ணை நடனம் ஆடச்சொன்னார்!

'நினைத்தால் நான் ப... வேன், கையால் அ... தால் ஆடுவேன்! சலங்... கொஞ்சும்ஒசையில் க... கும் கண்களை மா... வேன்' என்று பா... கொண்டு அந்த இ... பெண் ஆடினள்.

இந்தஆட்டத்தைம... முகமாக நின்று கவனி... சிவாஜிகணேசனுக்... கோபமும் ஆத்திர... ஏற்பட்டது. உடனே ... கிருந்து புறப்பட்டு வ... விஜயாவை சந்தித்தா...

### நளாயினியா?

'உன் கணவன் ... னேடு மகிழ்ச்சியாககு... பம்நடத்துகிறாரா?' எ... கேட்டார்! 'ஆமாம்! ... கள் நன்றாகத்தான் இ... கிறோம்' என்று ப... சொன்னர் கே ... விஜயா.

'இப்படியெல்லாம் ... னிடம் பொய் பேசி ... னில்லை. புராண கால...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டி : யோகி

யிட்டு ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

பல கலைஞர்கள் எம்.ஜி. ஆரால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். எம். ஜி. ஆருடன் தொங்கிக்கொண்டிருப்பவர்களைத் தவிர, வேறு யாருக்கு அவர் உதவி செய்திருக்கிறார்!

இன்றைக்கு சொகுசானவாழ்க்கை நடத்தும் ராமச்சந்திரன் பழைய வாழ்க்கையை மறக்கலாமா?

''வூடின்பேஸ்'' அதாவதுமரக்கட்டைபோன்ற முகம் என்று சொல்லி 'பக்தமீரா' என்ற படத்தில் வேஷம் கொடுக்க மறுத்தார்பிரபல டைரக்டர் எல்லீஸ் ஆர். டங்கன். பிறகு அவரிடம் எனக்கிருந்த செல்வாக்கைக் கொண்டு சிபார்சு செய்து சாதாரண 'ஜெய்மர்' என்ற தளபதி வேஷம் ராமச்சந்திரனுக்கு வாங்கிக்கொடுத்தேன்.

குறையாகக் கெஞ்சினார்.

என் மனைவியும் மற்றவர்களும் தடுத்தும்கூட நான் அந்தப் படத்தை எம். ஜி.ஆரிடம் கொடுத்துக் கதாநாயகனாக நடிக்கச் செய்தேன்.

அடுத்து ஜூபிடர் 'மோகினி' படத்தில் நானும் ராமச்சந்திரனும் சண்டை செய்திருந்தோம். அந்தச் சண்டையில் நான் செய்தது நன்றாக அமைந்துவிடவே, தனக்குமிஞ்சி எனக்குப் பெயர் வந்துவிடக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக அந்தக்காட்சியையே கத்தரிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார்

இந்த பழைய சம்பவங்களையெல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் எம். ஜி. ஆரின் நன்றிகெட்ட குணம், நம்பிக்கைமோசம் இவைகளைசககலைஞர்களிடமே காட்டிவந்தார் என்பதை ரசிகர்களும் அறியவேண்டும்.

# ''எம்.ஜி.ஆருடன்நடித்து நடித்து நடிப்பையே மறந்துவிட்டாராம் ஒரு நடிகை''

அடுத்து ஜூபிடர்'ராஜகுமாரி' என்ற படத்தில் நான் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்திருந்தேன். வில்லனாக நடிக்க எம். ஜி. ஆரை ஏற்பாடுசெய்தேன். ஆனால் எம். ஜி. ஆர்.என்னிடம் வந்து ''ஐயா எந்த வேஷமானாலும் நீ நடித்துவிடுவாய், வில்லனாகநடிக்க என்னால் முடியுமா? கதாநாயகன் வேஷமானால் 'பைற்'பண்ணிக்கிட்டே பூர்த்திசெய்துவிடுவேன். எனக்கே கதாநாயகன்வேஷத்தை கொடுக்கச்சொல்'' அழாத

எம்.ஜி.ஆர். உண்மையில் யாருக்காவது நல்லது செய்ய வேண்டுமென்று நினைத்தால் அவரால்நாசமாய் போன ஏராளமான தயாரிப்பாளரைக் காப்பாற்றவேண்டும். தமிழ்ப் படஉலகில் நடிப்புக்கு அவர் முதல் இடம் தரமுனையட்டும். ''உன்னோடு நடித்துநடித்து எனக்கு நடிப்பே மறந்துவிட்டது'' என்று அவரது கதாநாயகி ஒருவர் அவரைப் பார்த்து கதறுவதைசெவிகொடுத்துக் கேட்கட்டும்.

-9ம் கலம் பார்க்க)

...பரும் நடிகர் பாலையாசொல்கிறார்

...டு!

...பசாதே!!'

...னர்

நளாயினி மாதிரி கணவனுக்குப் பரிந்து கொண்டு பேசாதே!


## நினைவு இருக்கட்டும

இது 20-ம் நூற்றாண்டு! நினைவுஇருக்கட்டும்! கணவனைத், தட்டிக் கேட்க வேண்டிய காலம் இது' என்று விஜயாவிடம் கூறினார் சிவாஜிகணேசன்!

இக்காட்சி சித்ராலயாவின் 'நெஞ்சிருக்கும் வரை' படத்திற்கென பரணி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது!

பெங்களூரில் வாழும் இளம் பெண்ணாக கீதாஞ்சலியும், கே ஆர் விஜயாவின் கணவனாக முத்துராமனும் நடித்தார்கள்!

ஸ்ரீதர் கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்யும் இப்படத்தின் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்கிறது!



கும்மடியும்பானுமதியும் ஒருவரை ஒருவர் பார்த்து திகைத்து நிற்பதற்கு அப்படி அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் என்னதான் நடந்துவிட்டது?

— படம்: பட்டத்துராணி

## குறை தீர்ந்தது !

— மேகலா —

கலைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஒருநல்லசங்கமொன்று இல்லையென்ற குறை நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது. வெறும் சங்கமாக இது உதயமாகவில்லை. எழுத்தாளர்களையும், நடிகர்களையும், தயாரிப்பாளர்களையும்- சுருக்கமாகச் சொன்னால் பலதரப்பட்ட கலைஞர்களையும் இணைத்துக் கொண்டு கலை இலக்கிய பெருமன்றம் என்ற பெயரில் இந்த மன்றம் யாழ்மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கலைஞர்களுக்கு இந்த மன்றம் உருவாக்கப்படுவதற்கு காரணகர்த்தாவாகவிருந்த சிறுகதை எழுத்தாளர் டொமினிக்ஜீவாவை பாராட்டாமல் இருக்கமுடியாது. மன்றத்தை உருவாக்க அவர் செய்த விடாமுயற்சிக்கு நமது கலைஞர்கள் நன்றி சொல்ல மறக்கமாட்டார்கள்.

# நம் நாட்டுக் கலைஞர்



...ன்னப் பாத்திரத்தையேற்று நடித்தாலும், மிகவும் கச்சிதமாக நடித்திருக்கிறார். என்று பலருமே பாராட்டிப் பேசினார்கள்-'கடமையின்எல்லை' படம் யாழ்ப்பாணத்து திரையில் ஓடிக்கொண்டிருந்தபோது யாரைப்பற்றிச் சொல்லுகிறேன் என்பதை ஓரளவு புரிந்துகொண்டிருப்பீர்கள்! நமது கலைஞர் துரைசிங்கத்தைத்தான் குறிப்பிடுகின்றேன் என்றொரு விளக்கமும் வேண்டுமா?

யாழ்ப்பாண மாநகரசபையில் ஊழியராகக் கடமையாற்றும் இந்த நாடகக்கலைஞர் திரு. கே. துரைசிங்கம் 1950 ம்ஆண்டே 'நாம்இருவர்' என்ற நாடகம்மூலம் நாடகத்துறையில் புகுந்தார் கலைஞர் திரு. எஸ்.ரி. அரசுவை தனது நாடகக் குருவாகக் கருதும் இவர் ஐந்துமுறை மேடையேற்றப்பட்டு பெரும் புகழைச் சம்பாதித்த இன்பக் கனவு நாடகத்தில் கதாநாயகனாக நடித்து 'சபாஷ்' பெற்றார். கலைவாணர் நாடகமன்றத்தில் முக்கிய உறுப்பினராக இருந்து பல சரித்திர நாடகங்களில் நடித்து, சரித்திர நாடகமென்றால் துரைசிங்கமில்லாமல் நாடகமில்லை என்கிற அளவுக்கு தனது திறமையை வெளிப்படுத்தினார். பலநாடகமன்றங்களில் அங்கத்தவராகஇருந்த இவர் இப்போது யாழ். மாநகர சபை பொழுதுபோக்குச்சங்க பொறுப்பில் நாடக மன்றமொன்றை பலரின் உதவியுடன் சேர்ந்து ஆரம்பித்து சென்ற டிசம்பரில் ''பழைய காதல்'' என்ற சிறந்த நாடகமொன்றை மேடையேற்றினார். இந்த நாடகத்தில் கதாநாயகனாகவும் நடித்தார். 'நாடகபித்து' பிடித்த இந்தக் கலைஞர் துரைராஜா நாடகத்துறையில் என்னென்ன புதுமைகளைச் செய்யலாமோ அவ்வளவையும் செய்யவேண்டுமென்ற துடிப்புக் கொண்டவர்.

''மே''

கலை அரங்கம்

## சினிமா புதிர்

நினைத்தது சரியாகிவிட்டது! இந்தப் புதிரில் தடுக்கி விழப்போபவர்கள் பலர் என்பதைத் தெரிந்தும் இப்படியான புதிரைப் போட்டதற்குக் காரணம் ரசிகர்களின் நினைவை சோதித்துப்பார்ப்பதற்காகத்தான்!

இம்முறை புதிருக்கு விடையாக வந்தகார்ட்டுகள்தொகை 82 சரியானவை நான்கே நான்கு அவர்களுக்கு எமது பாராட்டுதல்கள். விடை: 'பணம் பந்தியிலே'

க.செல்வராசா, சாவகச்சேரி, கு.குணநாதன், ...ருகலை, எஸ்.நிமலா. யாழ்ப்பாணம், ஆர். பரமகுரு நவாலி.

-பா

(8-ம் கலத்தொடர்ச்சி)

கலைஞன் என்பவன் வேஷக்காரன் மட்டுமல்ல மோசக்காரன் என்றுமக்கள் நினைக்கிற அளவுக்கு எம். ஜி. ஆர். கூத்தாடுகிறார். புராணக்கதைகளில் நடிக்கமாட்டேன், திருநீறு பூசிநடிக்க மாட்டேன்... இப்படிப்போடப்பட்ட நிபந்தனையால் ஓட்டாண்டியான படாதிபதிகள் கொஞ்சமா? அப்படி யாவது சொன்னபடி நடந்து கொண்டாரா? ... வேஷம் போட்டிருக்கிறாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வாழ்க்கையில் துறவி

— மேல்கரவை கா. வ. சிவப்பிரகாசன் —

"நாதா! தாங்கள் என்னை எவ்வாறு பாவிக்கிறீர்கள்?" —அம்மையார்

"ஆலயத்தில் நான் வழிபடும் ஜகன்மாதா ஓர் உருவெடுத்து இந்தத்தேகத்தை ஈன்ருள் அவளே மற்ருேர் உருவெடுத்து இப்போது இங்கு நின்று கொண்டு இந்தத் தேகத்துக்குப் பணிவிடை செய்கிருள்."

— துறவி

இல்லறம் மேற்கொண்டு, பின் துறவு கொள்வாருமுண்டு. இவ்வுலக இன்பம் துய்ப்பது, சிற்றின்பம். கடவுளுடன் ஒன்றித்த நிலையில் எய்துவது பேரின்பம். சிற்றின்பத்தில் திளைத்தாற்ருன், பேரின்பம் நாட இடமுண்டு. பந்த பாசங்களை அனுபவித்து அறுத்தல் எளிது. இவ்வகை வாழ்க்கை மேற்கொண்டோர் சரிதை பலவுண்டு. இவ்வழிநடைக்கெதிர்மாருக, விதிவிலக்காகத் துறவியாகவே பிறந்து, வாழ்ந்து, சமாதியடைந்தவர்தான், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சுவாமிகளின் பிறப்பு ஞாபகார்த்த தினம், நாளை (18-2-1967) உலகெங்கணும், சகலசாகியத்தாராலும் கொண்டாடப்படவிருக்கின்றது. நாமும் சுவாமிகளை நினைவு கூர்ந்து இறையருள் எய்தும் வண்ணம் இக்கட்டுரை சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.

அழகில் ஒப்பாரும் மிக்காருமில்லாத இளம் மனைவி அன்னை சாரதாதேவி பக்கத்தில், ஆனுல் சுவாமிகள், சமாதி நிலையெய்தும் வரை, நிறை பிரமச்சரியம் அனுட்டித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் 1836-ம் ஆண்டு மாசி மாதம் 18-ந் திகதி காலை 6 மணி 23 நிமிஷத்தில் காமர்ப்புகூர் என்ற இடத்தில் அவதரித்தார். சுவாமிகளின் ஜென்ன ஜாதக இராசிச் சக்கரம் கீழே கொடுக்கப்படுகின்றது. இவ்விராசிச் சக்கரமூலம், பிரசித்தி பெற்ற ஜாதகங்கள் என்னும் சோதிட நூலாகும். ஜாதக நவாம்சச் சக்கரமும் அத்துடன் கொடுத்துள்ளேன்.

| | | | |
|---|---|---|---|
| வெ | | கே | வி |
| ல சூ சந் பு | 'நிரயன' | | |
| செ | இராசி | | |
| | ரா | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| வி பு சனி கே | நவாம்சம் | | செ |
| | | | ரா |
| சூ | ல | | வெ |

சுவாமிகள் அவதரித்த பொழுது நாலு கிரகங்கள் உச்சநிலையில் இருந்திருக்கின்றன. உச்சநிலையில் கோள்களிருப்பதாலுள்ள பலனை ஆராய்ந்த புலிப்பாணி மகாமுனிவர், "உச்சக் கோளையுச்சனேக்க ஊழ்வினையை இன்னதென்று அறியேன்" என்று வினஎழுப்பி, "அது கேளுச்ச பலனில்லாமல், பிச்சனென்றேன், பார்தனிலே தரித்திரன்" என்று பதிலிறுக்கின்ருர். இங்கே உச்சக்கோள் வெள்ளி தனஸ்தானத்து நிற்கத் தீக்கோள் இராகு உச்சனுகித் தனது 9-வது பார்வையால் தாக்குதலையும். இவ்விலக்கண அமைவுக் கொப்பச் சுவாமிகள், பிச்சனுகித் தரித்திரனுகி அலைந்து வாழ்க்கைஓடத்தை இட்டுச் சென்றமையையும் காணுங்கள்.

இல்வாழ்க்கையில் நாட்டமின்றித் துறவியாகவே வாழ்ந்தார் சுவாமிகள். தேவியின்அருளால் 'தோதாபுரி' என்ற சுவாமிகளின் சிஷ்யராஞர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். நருமதை நதிக்கரையிலே 40 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்துதான், நிர்விகற்ப சமாதியில் அத்வைத சித்தியடையும் பண்பைப் பெற்றவர், இத்தோதாபுரி சுவாமிகள். நிர்விகற்ப சமாதியில் நிற்கும்பொழுதுஒருவருக்கு,இதயத்துடிப்புநின்று, சுவாசப்போக்கு அறவே அற்றுவிடும். தோதாபுரி சுவாமிகள், 'அத்வைத' சாதனைகளை ஸ்ரீ ராகிருஷ்ணருக்குக கற்றுக்கொடுத்தார்.ஒரேநாளில் நிர்விகற்ப சமாதியில் அத்வைத சித்தி சுவாமிகளுக்குக் கிட்டியது. பின் காவியுடை தரித்துப் பிரம்மோபதேசம் பெற்ருர். வைதிக விதிப்படி சந்நியாசம் ஏற்ருர். பிரம்மநிஷ்டை புரியும்படி குருவினல் பணிக்கப்பட்டார்.

இந்த யோகஅமைவு பிரவிராஜ்யயோகம் என்றுபெயர்படும் சோதிடநூல் சாராவளி 20-ம் அத்தியாயத்தில் பிரவிராஜ்ய யோகம் பற்றி விளக்கும்பொழுது "சந்திரன் நவாம்சத்தில், செவ்வாய் க்ஷேத்திரமான மேட விருச்சிகத்திலிருந்து, சனியால் பார்க்கப்பட்டு மற்றக் கிரகங்களால் பார்க்கப்படாமலிருப்பின், தபசுசெய்பவனுவான்" என்று கூறுகின்றது. இவர்களுக்குச் சனிக்குக் கூறப்பட்டிருக்கும்பிரவிராஜ்யயோகம் கிடைக்குமென்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. "சனி பிரவிராஜ்ய யோககர்த்தாவாயின், சன்னியாசிகள், வர்ணுசிரமங்களை விட்டுத் தனது இச்சையின்படி சஞ்சரிக்கிறவர்கள், விருட்சத்தினடியிலிருந்து கடினமான தபசு செய்கின்றவர்கள் ஆகிய யாபேருக்கும் அச்சாதகர் தலைவராயிருப்பார்" என்று இந்நூல் விளக்கம் கொடுக்கின்றது. இங்கே சுவாமிகளின் ஜாதக நவாம்சச் சக்கரத்தில், சந்திரன் செவ்வாயின் க்ஷேத்திரமாகிய மேடராசியில், வேறெக் கிரகநோக்குமின்றி நிற்பச் சனி தனது ஆட்சி வீட்டிலிருந்து 3-வது பார்வையால் தாக்கி நிற்றல் காண்க.

குடும்பவாழ்க்கையை இட்டுச் செல்வதற்குப் பனனிரண்டாமிடத்தில் செவ்வாய் நிலை கொண்டிருப்பதும், உகந்ததல்ல. 'ஒன்றிரண்டு நாலேழு, உதிக்கும் வியமெட்டிடத்திற் சேயும் நிற்க, உதவாது களத்திரங்கள் தருகாது காதலியைத் தாயே" என்று புலிப்பாணி மகாமுனிதர் சோதிட இலக்கணம் வகுத்துள்ளமை காண்க.

இராசிச் சக்கரத்தில்புலப்படாத பலஅம்சங்கள் பாவசக்கரத்தில் தெளிவுபடல் காண்க. பாவசக்கரம்கணித்துக் கீழே கொடுக்கப்படுகின்றது.

பாவசக்கரத்திலுள்ள சந்திரனின் நிலையை அவதானியுங்கள். சந்திர இலக்கின அமைவுகொண்டு ஆராய்ந்தால் பல விஷயங்கள் தெளிவுறல் காணலாம். இலக்கினதிபதி 12 திபதி கூட்டுச் சேரினும், தொடர்பு பெறி

(10-ம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாண வாசிகளுக்கு
500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள்
இலவசம்

6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி. பி. பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.


எப்பொழுதும் பாவியுங்கள்
போர்ஹான்ஸ்
பற்பசை


புகழ்பெற்ற பல்வைத்தியரின்
தனித்தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லீறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலிய பற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும்வரை திடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளும் வேண்டுமென்ருல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது. உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம்பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

உரமான, வெண்ணிறப் பற்களுக்கும்
உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளுக்கும்
என்றும் பாவியுங்கள்
போர்ஹான்ஸ்
பற்பசை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சுடர்

## அழகுக் குறிப்பு

'வளர்மதி'

நங்கையரின் கூந்தலுக்கு ஓர் இயற்கையான நறுமணம் உண்டு. சதா 'கமகம' என நறுமணம் வீச இதோ ஒரு தூபம்.

அன்னாசிப்பூ-4 அவுன்ஸ்., கோரைக் கிழங்கு-4 அவு., தேவதாரிச் சக்கை-4 அவு., பளிங்கு சாம்பிராணி-8 அவு., அகிற் கட்டை-4 அவு., சம்பங்கி மொக்கு-2 அவு., கவுளா-2 அவு., அகர் 4 அவு., ஜாதிக்காய்-1 அவு., மஸ்தகி-1 அவு., ஏலக் காய்- 1 அவு., கற்பூரம்-அரை அவு., இலவங்கம் பட்டை-4 அவு., அரக்கு-2 அவு., சந்தனத் தூள்-மூன்று இரு., குலாப் பூ-அவு., இவைகள் எல்லாம் மருந்துக் கடைகளில் கிடைக்கும். இவைகளை வாங்கி இடித்துத் தூள் செய்யவும். பழுப்புச் சர்க்கரை2இருத்தல் எடுத்துப் பாகு செய்து, அதிலே தயாரித்துள்ள கலவைத் தூளைப் போட்டுக் கிளறி இறக்கி விடவும். சூடாக இருக்கும் போதே கொட்டைப் பாக்களவில் உருண்டைகள் செய்து கொள்ளவும். ஆறிய பின் சீசாவில் பத்திரமாகப் போட்டு வைக்கவும். நீராடிய பின்கூந்தலுக்குஇதைத் தூபம் போட்டால் மிகவும் பரிமள வாசனை உண்டாகி, மன உல்லாசத்தைத் தரும். நாள் முழுதும் 'கமகம' வென்று வாசனை வீசிக் கொண்டிருக்கும்.

## பெண்மை

எத்தகைய வருத்தமும் ஏமாற்றமும் ஏற்படினும், கணவனையும், குழந்தைகளையும் எவள் அன்புடன் பேணி அன்னமளிக்கிறாளோ அவளிடமே பெண்மை என்னும் மகத்தான தன்மை நிறைந்திருக்கிறது. -கிளாராலுஸ்

புதல்விகளையும், புதல்வர்களையும் நான் ஒரே நிலையில் தான் நடத்துவேன், -மகாத்மாகாந்தி

ஒருபெண்ணின் ''இல்லை'' ''ஆம்''என்ற சொல்லின், ஊடே ஒரு ஊசி கூடப் புக முடியாது. -ஸெர்வன்ரஸ்

### காதல்

காதலில் கசப்பும் தேனும் கலந்தே இருக்கிறது, -பிளாட்ஸ்

பெண்களிடத்திலுள்ள அன்பேஎன்காதலைப்பெறும், அவர்களின் அழகியதோற்றமல்ல. -ஷேக்ஸ்பியர்

காதல் என்பது ஓர் அழகிய கனவு. -கு. ப. ராஜவேலு

## சுவையாகசமைப்போம்!

### தயிர் அல்வா

**தேவையானவை:**

கட்டித் தயிர் — 1 சுண்டு
சர்க்கரை — 1 சுண்டு
நெய் — 16 ஸ்பூன்
ஏலக்காய் — 24

செய்யும் முறை:- கட்டித் தயிரைத் துணியில் கொட்டி முடிந்து நீரைச் சுத்தமாகஇறுத்துக்கொண்ட பின் கரண்டியால் மசித்துக் கட்டியில்லாமல் வெண்ணெய் போல் செய்துகொள்ளவும். சர்க்கரையைப் பாகுகாய்ச்சிக்கொண்டு அதில் நீர் இறுத்த தயிரைச் சேர்த்து ஏலப்பொடி போட்டு ஒத்தாற்போல் கிளறவும். அகன்ற தட்டில் நெய் தடவி இதனைப் பரவலாகக் கொட்டி வில்லை போட்டு ஆறியபின் உபயோகிக்கவும்.

### ஜவ்வரிசி இட்லி

புழுங்கலரிசி — 1 சுண்டு
ஜவ்வரிசு — 1/4 சுண்டு
புளித்த தயிர்—1/4 சுண்டு
தேங்காய் துருவல் — 1 கரண்டி
உப்பு — 2 ஸ்பூன்
பச்சை மிளகாய் — 4
கொத்தமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு
பெருங்காயம்.

புழுங்கலரிசியையும் ஜவ்வரிசியையும் வெந்நீரில் ஊறவைக்கவும். தேங்காய், பச்சைமிளகாய், உப்பு ஆகியவற்றை விழுதாக அரைத்துப் போட்டுத்தயிரையும் விட்டு நன்றாகக் கலக்கவும். கொத்தமல்லி கறிவேப்பிலையைப் பொடியாக நறுக்கிப்போட்டு, பெருங்காயத்தைக் கரைத்து ஊற்றி எல்லாவற்றையும் நன்றாகக் கலந்துகொண்டு இட்லிபோல் வேகவிட்டு எடுக்கவும்.

## விவாத மேடை

### வீணை அங்கலாய்க்கலாமா? பெண்கள் ஊதாரிகளா?

அன்பின் பிறப்பிடமாகவும் தியாகத்தின் உறைவிடமாகவும் பெருமையின் சின்னமாகவும் வாழ்க்கையின் தெய்வமாகவும்திகழ்ந்திடும் பெண்ணை ஆண் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் கட்டுப்படுத்தவிரும்புகிறார்கள். பெண்ணும் தங்களைப் போன்ற ஓர் உயிர் என்ற கோதாவில் மதிப்பளிக்க மறுக்கிறார்கள்.

அதிகம் படித்த பெண்அப் படிப்பிலும் குறைந்த படிப்புள்ள ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டால் கணவனை மதியாதவர், அடங்காப் பிடாரி, படித்த திமிர் என ஏசுகின்றனர். பெண் ஒரு நுட்பமான யந்திரம். அது திறமையற்றவரின் கையில் அகப்பட்டால் இவது பார்க்க முடியாதபடி உடைந்து விடும்.

பெண்கள் பொறுமையும் ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையும் உடையவர்கள். முன்கோபமும் அவசரமும் ஆண்களின் உடன் பிறப்பு. சிந்திக்கத்தெரியாது, சிந்திக்கதுணியாது. சிந்திக்க மறுத்துப்பிடிவாதம் செய்யாது பெண்களின் திறமையை வெளிக்காட்ட ஆண்களே சந்தர்ப்பம் கொடுங்கள். இன்றைய சமுதாயத்தில் குடும்பத்தலைவராகத் திகழும் ஆண்கள் சிலர் பொறுப்பை உணராது ஊதாரிகளாகத் திரிகின்றனர். சம்பளத்தைஎடுத்துக் கொண்டு மதுக் கடையை நாடுகின்றனர். வீட்டில் குடும்பச் செலவைப் பராமரிக்க கணவன்சம்பளத்தை கண் நோக்கும் பெண் நிதானமிழந்து வெறுங்கையுடன் வரும் தம் கணவனைப் பார்த்து வேதனை அடைகிறாள். உள்ளம் உடைகிறாள். இப்படியான ஊதாரிகளின் மிருகத்தனம் நற்குணம் நிறைந்த பெண்ணையும் பேயாக்குகிறது.

இன்று தொழில்பார்க்கும் எத்தனை ஆண்கள் மேல் நாட்டு உடை சோப், கிறீம், பவுடரை உபயோகிக்காமல் இருக்கிறார்களா? இதைக் கருத்தில் கொள்ளாது தொழில் பார்க்கும் பெண்களின் ஊதியம் சோப்பிலும் பவுடரிலும் தான் செலவாகிறது எனவீணைஅங்கலாய்க்கலாமா?

ஆண்சமூகமே! குடிப்பதையும் மற்றும் கேளிக்கைகளையும் கைவிடுங்கள். அப்பொழுது குடும்பம்ஒற்றுமையாக வறுமையின்றி வளமுடன் வாழ வழி பிறந்து விடும். மனைவிக்கு அடிக்கும் கையால் மண் வெட்டியை எடுத்துநிலத்தை கொத்துங்கள் உணவுப்பிரச்னைதீருவதுடன்நாடும் முன்னேற்றம் அடைந்து விடும். என்றாலும் பெண் தடை என்ற நொண்டிச் சாட்டுச் சொல்லாதீர்கள்!

—செல்வி 'ச'

## வீண் குற்றச்சாட்டுகள் ஏன்?

இன்று எத்தனை ஆண்கள் வீதியில் நின்று பெண்களைக் கேலிசெய்கிறார்களே, இவர்கள் தானா பழைய தமிழ்ப் பண்பாட்டை விரும்புகிறவர்கள்! ஆண்களின் வேலையில்லாத் திண்டாட்டம் பெண்கள் மேல் பொறாமை அடையச்செய்கிறது. பெண்கள் ஆண்களிலும் பார்க்க கல்வியில் முன்னேறுகின்றனர். அதனால் அவர்கள் நல்ல உத்தியோகம் பார்க்கிறார்கள். ஆனால் ஆண்களோ 'பவுடர், சோப் ஆடம்பர உடைகளைத் தொழில் பார்க்கும் பெண்கள் பாவிக்கிறார்கள்' என்று கூறித் தொழில் பிரச்சனையைவேறு முனைக்குத் திருப்ப முயற்சிக்கிறார்கள்.

ஆணோ, பெண்ணோ திறமைக்குத் தான் இன்றுமதிப்பளிக்கப்படுகிறது. படித்த பெண் தகுதியுடையவராயிருந்தால் தொழில் பார்ப்பதில் என்ன குற்றம்? பெண்களின் திறமைக்குக் காரணம் பொறுமை, ஒழுக்கம், கல்வி, கவனம் ஆகியநான்குமேயாகும். இன்று எத்தனை படித்த பெண்கள் குடும்பத்தைத் தம் ஊதியம் மூலம் கொண்டு நடாத்தி வாழ்க்கைக்கேவழிகாட்டியாகத் திகழ்கின்றனர். ஆண்களே! பெண்கள் மீது வீண் குற்றங்களைக் கண்டு பிடிக்காது நீங்கள் முன்னேற உறுதியுடன் உழையுங்கள். பெண்களைப் போல் உங்களுக்கும் வெற்றி கிட்டும்.

—சி. [illegible]

"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ T சேட்
○ ரெடி சேட்
○ ரெடி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ காள் மேன்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

### திருமணம்

ஆண் ,பெண் இருவரும் ஒரு மனப்பட்டு வாழும் கல்விக்கூடம் திருமணவாழ்க்கை. இதை விடச் சிறந்த கல்வி உலகில் மனிதகுலத்தில் இல்லை.

-ஷோ-

திருமணம் என்பது ஆண் பெண் நட்பு. நம்பிக்கையில்லாமல் நட்பு நீடிக்காது. நம்பிக்கையோ நேர்மையிலிருந்து மலரும் பூ.

-ஜான்சன்

பொன்னுக்கும், மண்ணுக்கும், புகழுக்கும் அவாவுற்று அன்பில்லாத ஆடவரும்மகளிரும் மணஞ்செய்து கொள்வார்களானால் அவர்களது வாழ்க்கைக் பலவகை குற்றங்களுடையதாய் நிலைகுலைந்து போம்.

-மறைமலைஅடிகள்

## இந்திய பிரதமர் இந்திராவுக்கு பிடித்த வர்ணம்!

மஞ்சள் நிறத்தைப் பாரதப்பிரதமர்இந்திராகாந்தி பெரிதும் விரும்புகிறார். ஏதாவதுநெருக்கடி ஏற்பட்டால் உடனே மஞ்சள் ரவிக்கையோ, மஞ்சள்சேலையோ அணிவது இந்திராவின் வழக்கம்.

## திருமணத்தில் ஒரு திருப்பம்

— சிந்தனைச் செல்வன் —

பொதுவாக எங்காவது திருமணம் நடந்தால் மணமகள் கையை மணமகன் பிடிப்பதே வழக்கம். இல்லையா? இராமலிங்க வள்ளலார் திருமணத்தில் நடந்தது வேறு. மணமகள் மணமகனின் கையைப் பிடித்து தீவலம் வந்தாள்.

இதிலிருந்து இராமலிங்க வள்ளலாருக்கு அவர் விரும்பாத நிலையில் திருமணம் நடைபெற்றதென்பதுபுலனாகிறது. தான் விரும்பாத திருமணம் நடந்ததால், அதில் இருந்து விடுபட முயன்ற இராமலிங்கம் பிள்ளை, ஒருநாள் தான்விரும்பியதை நிறைவேற்றியே விட்டார். இல்லறப்பற்றைத் துறந்தும் சென்னையில் சில காலம் தங்கி இருந்தார் இராமலிங்கம் பிள்ளை.

இப்போது அவர் உலகை வெறுத்த துறவி. இனி நாம் அவரை இராமலிங்கம் பிள்ளை என அழைக்காமல், துறவியைக்குறிக்கும் இராம அடிகள் என்ற பெயரில் அழைப்போம்.

ஆதாரம்:- வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு.

## குழந்தை வளர்ப்பு

— சரோஜினி சங்கர் —

சிறு கோளாறுகளுக்கெல்லாம் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை. உணவை ஒழுங்கு படுத்தினாலே அவை பெரும்பாலும் சரியாகி விடும்.

குழந்தைகளை அவைகளுக்கென தனிப் படுக்கையில் படுக்கச் செய்து பழக்கப்படுத்துவது நல்லது. தாயின் அருகிலேயே இருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

குழந்தைக்கு உடுத்தும் ஆடைகள் தூய்மையானதாக இருப்பது அவசியம். குழந்தைதானே என்று பல தாய்மார்கள் அலட்சியமாக இருந்துவிடுகின்றனர். அழுக்கான உடைகளை அணிந்து கொண்டிருக்கச் செய்யக் கூடாது.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

பண்டித வித்துவான் எம். ஏ. பாலசுந்தரம் பி. ஓ. எல், [illegible]

மேடம் - இந்த இராசியிற் பிறந்தவர்களுக்கு இது நல்ல வாரமாக அமைந்த போதிலும் பல இன்னல்கள் இடையிடையே தோன்றி மறையும். உறவினரின் துக்கச் செய்தி கிடைக்கும். தேகசுகம் காணப்படும். நிலையிற் தடுமாற்றம் உண்டு. புண்ணியகாரியங்களில் ஈடுபட்டு மகிழ்வு அடைவார்கள். போசன சுகமுண்டு. இந்த இராசியாளருக்குச் செவ்வாய் பகவான் வெகு பெலனாகக் காணப்படுவதால் பல துயரும் நீங்கும். குருபகவானுக்கும் சனிபகவானுக்கும் பிரீதி செய்யவும். சிவப்புக்கரை வேட்டி, சேலை அணியவும்.

இடபம்:- இந்த இராசியிற் பிறந்தவர்களுக்கு இது நல்ல வாரமாகாதென்பது கருத்தாகும். போகிற காரியங்களில் நஷ்டம் உண்டாகும். தேகசுகம் வலுவாகப் பாதிக்கப்படும். செலவுகள் கட்டுக்கடங்காது போகும். இலட்சுமீகரம் உண்டு. வீண் அபகீர்த்திக்காளாகி வருந்துவார்கள். குடும்பத்தில் கலகமுண்டு. எக்காரியத்திலும் கவனமாக இருத்தல் நலம். இவ்விராசியாளர் புத பகவானுக்கும், சூரியபகவானுக்கும் பச்சை, சிவப்புச் சாத்தி வழிபட வேண்டும். சனிபகவானுக்கு எள் எண்ணெய் சிட்டியில் எரிக்கவும். பச்சை, வெள்ளை, வேட்டி, சேலை அணியவும்.

மிதுனம்:- இந்த இராசியிற் பிறந்தவர்களுக்கு இது நன்மைதரும் வாரமெனினும் பொருள் வகையில் பல சேதமுண்டு. வீண் கலகமுண்டாகும். பல காரியமும் தடைப்படும். நிலைமாற்றத்தைக்கொடுக்கும். கடற்றொழிலாளர் போக்கு வரத்துச் செய்வோர் அவதானமாக இருக்கவேண்டும். திரவிய லாபமுண்டு. தருமச்செயல்களில் ஈடுபடுவார்கள். இந்த இராசியாளர்கள் விஷ்ணு வழிபாடியற்றவேண்டும். மூர்த்திக்குப் பச்சை அல்லது மஞ்சள்பட்டுச் சாத்தி அர்ச்சிக்கவேண்டும்.

கடகம்:- இந்த இராசியிற் பிறந்தவர்களுக்கு குருபகவான் ஜென்மாந்திரத்திலிருப்பதாலும் சனிபகவான் பாக்கியத்தானத்திலிருப்பதாலும் தனவிரயத்தை உண்டு பண்ணுகின்ருன். வீண்பழிகளையும், விரோதங்களையும் உண்டுபண்ணுகின்ருன். குடும்பத்தில் கலகம் நிகழ்தலுமுண்டு. புத்தியீனத்தால் துக்கமடைவார்கள். அபகீர்த்திக்காளாகி வருந்துவார்கள். செலவுகள் அதிகரிக்கும். இவ்விராசியாளர் குருபகவானுக்குப் பிரிதி செய்ய வேண்டும். சனிக்கிழமை கடவுள் வணக்கம் செய்தல் நலம். கொடுக்கல் வாங்கல் செய்வது நல்லதல்ல. நீலவஸ்திரம் நல்லது.

சிங்கம்:- இது ஒரு சிறந்த வாரமாகும். திடீர் பிரயாணம் ஏற்படலாம். நேரம் வீண் விரயமாகும். திரவிய இலாபமுண்டாம். மன வேதனையுண்டாம். வழக்கில் வெற்றி. பெண்களுக்கு நோயுண்டு. வாக்குவாதங்களில் ஈடுபடல் ஆகாது. செலவுகள் சாமானியமாகச் சமாளிக்கப்படும். இவர்களுக்குக் குருபகவான் விரயத்தையும் சனிபகவான் தொழிற் பங்கத்தையும் ரோகத்தையும் கொடுப்பதால் குரு சனி வாரத்தில் வழிபாடியற்றிப் பிரீதி செய்தல் நலம்.

கன்னி:- இவ்வாரம் பலன் தரும் வாரமாகும். தனலாப முண்டாகும். தேகசுகமுண்டுஎனினும் இடையிடையே வியாதியுண்டு. வியாபாரிகளுக்கு எதிர்பாராத வகையில் இலாபமுண்டு. உத்தியோகத்தர்கள் தொழில் வகையில் அனுகூலமடைவார்கள். கன்னியர்களுக்கு மாங்கலியச்சிறப்புண்டு. பொருள் பெருக்கமுண்டு. குடும்பத்தில் நலிவுகள் காணப்படும். முருகன் வழிபாடியற்றவும். செவ்வாய், வெள்ளி, கேது. இவர்களுக்குப் பிரீதிசெய்யவேண்டும்.

துலாம் - இதுமத்திமமான பலன் தரும் வாரமாகும். குடும்பத்தில் நிலைப் பிரிவுண்டு. பொருள்வகையில் பல சேதங்களுண்டாகும். வீண் வழக்குக் கணக்குக் கலகமுண்டு. இல்லச்சிறப்பின்மை, மனக்கசப்பு, வியாபாரிகளுக்கு வியாபாரம் பலிதமாக இருந்தாலும் திருப்தியேற்படாது. இலாபமுண்டு. அபகீர்த்தியால் வேதனையடைவார்கள். வயிற்றில் ரோகமுண்டு. அகால போசனத்தைத் தவிர்க்கவும்.

விருச்சிகம் - இவ்வாரம் தேகசுகம் பாதிக்கப்படலாம். செலவுஅதிகம். பகைவரால் தொல்லைகள். சந்தோஷமான செய்திகிடைக்கும். இனசனக்கொண்டாட்டம் உண்டாகும். பொருள் வருவாய் பாதிக்கப்படும். வார இறுதியில் சுகமுண்டு. இந்த இராசியாளர் செவ்வாய் விரதமிருத்தல் நன்மை தரும்.

தனு;- இவ்வாரம் மங்களகரமானதாகும். குடும்பத்தில் பல நன்மைகள் நிகழும். வாழ்க்கையில் சத்துருக்கள் தொல்லைகளுண்டு. காரியானுகூலமுண்டு. தொழில் வகையில் வெற்றி காணப்பட்டாலும், மனம் திருப்தியடையாது. பொருள் வகையில் கஷ்டமுண்டு. கடன்தொல்லையால் மனவேதனையடைவார்கள். குடும்பத்தில் சந்தோஷமாகவே காணுவர். அதிகாரமாகவே எல்லாக் கருமத்தையும் நடாத்தி வெற்றி காணுவர். பொறுமை அவசியம். இவ்விராசியாளர் குருவுக்குப் பிரீதிசெய்து விஷ்ணுவுக்கு மஞ்சள் பட்டுச் சாற்றி வழிபடவேண்டும். ஆடவர் வெள்ளை வஸ்திரம் அணிதல் நன்று. பெண்கள் மஞ்சள் சேலையணியவும்.

மகரம் -இவ்வாரம் தேகத்தில் பசலையுண்டாகுதல், சொறி, சிரங்கு காணப்படும், பொருள் வகையில் நஷ்டமேற்படும். மனக்கவலையேற்படும். களத்திரசுகமுண்டு. செலவுகள் கட்டுக்கடங்காதுபோகும். வீண் குறைகேட்டல், சத்துருக்களால் தொல்லைகள். இவ்விராசியாளர் இந்தவாரத்தில் ஞாயிறு விரதம் இருக்கவும். அன்று கடவுள் வழிபாடியற்றிச் சூரியனுக்குப் பிரீதிசெய்யவேண்டும். சிவப்புநிற ஆடை சூரியனுக்குச் சாற்றி வழிபடவும்.

கும்பம்:-இவ்வாரம் கஷ்டபலன்களைத்தரலாம். நிலையிற் கலக்கமுண்டு. வீண் காரியங்களில் ஈடுபடலாகாது. குடும்பசுகமுண்டு. வியாபாரிகளுக்கு வியாபார வகையில் இலாபமதிகரிக்கும். வழக்குகளில் வெற்றி. பொருள் வகைகளில் அழிவு காணப்பட்டாலும் பொருள் வருவாய் காணப்பட்டுச் செலவுகள் கட்டுக்கடங்கும்.

மீனம்:- இவ்வாரம் தேகநலம் பாதிக்கப்படலாம். பிணியினல் செலவுகள் ஏற்படும். கண்வியாதி, இருதய வியாதி காணப்படலாம். பொருள் வகையில் திருப்தியுண்டு. மரண பயத்தினல் மனக்கலக்கமடைவார்கள். வியாபாரிகளுக்கு இலாபம் மத்திமமாகும். செலவு அதிகமுமாகும். வார இறுதியில் நன்மை. குரு பலமாக இருப்பதால் இவ்விராசியாளருக்கு எல்லாம் பொதுவாக நன்மையாகவே முடிவடையும். சனிக்கு இவ்விராசியாளர் பிரீதிசெய்து எள்எண்ணெயும் எரிக்கவும்.

## வரப்பெற்றேம்

விவேகி- திங்கள் இதழ் பொங்கல் மலர் தை 1967. ஆசிரியர் மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி. கிடைக்குமிடம்: 32, கண்டிவீதி, யாழ்ப்பாணம். விலைசதம் 40.

இளம்பிறை டிசம்பர்: 1966 திங்கள் வெளியீடு. கிடைக்குமிடம்:- இளம்பிறை231, ஆதித்திருப்பள்ளித்தெரு, கொழும்பு-13 விலைசதம்:-30.

கந்தபுராணம்,- தக்ஷிண காண்டம்உரை வெளியீட்டு விழாசிறப்பிதழ். உரைஆசிரியர்பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. கிடைக்குமிடம் இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

## குழந்தைவளர்ப்பு

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் சாம்பல் தின்ருல் அது சோகையின் அறிகுறியாகும். கீரைப்பூச்சி, கொக்கிப்புழு போன்றவை சோகைக்கு காரணமாக இருந்திருக்கலாம். உணவோடு கல் ஈரல் சத்துசேர்ந்தால் சோகை நீங்கும். வீட்டுக்கு வருபவர்களிடம் பெற்ருேர் பேசும் போது குழந்தைகள் குறுக்கிடுவது இயல்பு. பெற்ருேர் இதனைத் தடுத்தால் குழந்தைக்கு பெரியவர்களைக் கண்டாலே அச்சம் ஏற்பட்டு விடும். தாயின் அன்புஇல்லாததால் பிறரிடம் பழகக் குழந்தை ஆசைப்படும். அதைத் தடுக்கக் கூடாது.

திக்கிப் பேசும் இயல்புஒரு வகை அச்சத்தால் தான் உண்டாகிறது. குழந்தையை வீட்டுச் சூழ்நிலையிலிருந்து பிரித்து வைப்பதே இதற்குப்பரிகாரமாகும். தனிமையாகவும் உரக்கவும் பேசிப் பழகிவந்தால் திக்கல்நின்று விடும்.

## நீங்கள் எந்த ரக மனிதர்?

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகவிருக்கிறதா?

20. வாழ்க்கையிலே அதிக இன்பம் உங்களுக்குத் தருவது:

(அ) உங்கள்சொந்தசக்தி, மற்றவர்கள்மீதான கட்டுப்பாடு, உங்கள் குடும்பத்துக்காகச் செய்யும் வேலை ஆகியனவா?

(ஆ) மற்றவர்களுடன் இருப்பதிலுள்ள மகிழ்ச்சியும், அவர்களுக்குஅளிக்கும் இன்பமுமா?

(இ) சிருஷ்டிக்கலையில் ஈடுபடுவது, உள்ளத்திருப்தி, மற்றவர்களுக்குப் போதிப்பது அல்லது உதவுவதா?

(ஈ) அன்பைக் கொடுப்பதும் பெறுவதுமா?

### ‘அ’ ரகம்

கடுமையான, வைரத்தோல் வாய்ந்த, சக்தி மிகுந்த, தொழிலாற்றும் திறமையுடைய, துணிவுள்ள, ஒரு பிறவி அமைப்பாளர், அதிகாரம் வாய்ந்தவர், ஆதிக்கம் செலுத்துபவர், அசட்டை சுபாவம் உள்ளவர், ஆனல் பொறுமையுள்ளவர், உலக விவேகமுடையவர், பொறுப்புணர்ச்சி வாய்ந்தவர்—, விஷேசமாகக் குடும்பம், குழந்தைகள் தொடர்பாக எப்பொழுதுமே ஒரு விசுவாசமுள்ள குழந்தை, உறவினர் அல்லது, பெற்ருர், இலட்சியப் பிரயாணி, எப்போதுமே அலுவல்களை நடத்தக்கூடியவர், தடைகள் அல்லது வீழ்ச்சிகளை மடக்குவதில் திறமையுள்ளவர், இத்தகையவரது பிரம்மாண்டமான சக்தியும், தன்னம்பிக்கையும், மற்றவர்களுக்கு அதிகாரம் செலுத்துவது போல் தோன்றும்.

### ‘ஆ’ ரகம்

சமூகத்தில் கலந்து வாழ்பவர், நல்ல நட்பாளர், கொண்டாட்டத்தின் உயிரும், ஆத்மாவுமாவார். வெளியின்பங்களில் மனப்பூர்வமாக ஈடுபடுபவர், சுகபோகி, கடந்த காலம் பற்றியோ, சொந்தப் பொறுப்புப்பற்றியோ அதிகம் உணராதவர், துணிவுள்ளவர், நம்பிக்கைவாய்ந்தவர், கடும் உழைப்பாளி, கடுமையாக விளையாடுபவர், கேளிக்கைளில் அதிக ஈடுபாடுடையவர், மற்றவர்களின் மகிழ்ச்சிக்கு உதவுபவர், தீரம் வாய்ந்தவர், எதிலும் முன்னேடி, மாற்றத்தை விரும்புபவர், விசுவாசமுடையவர், சுயநலமுள்ளவர், கலை இலக்கியத்துறைகளில் பெரிய ஈடுபாடுஇல்லாதவர், இசையை இவர் விரும்பினல் அது பித்தாகவேஇருக்கும், தனியாகவிருப்பதை வெறுப்பவர், ஓரளவு பெருமைபிடித்தவர், பெரிதுபடுத்துவதில் விருப்பமுடையவர், புளுகுபவர், உணர்ச்சி வசப்படக்கூடியவர், புத்திசாலித்தனமற்ற முறையில் மது அருந்தக்கூடியவர், தனது மனேநிலையைச் சீர்தூக்கிப்பார்க்கும் வழக்கம் கிடையாது, எப்பொழுதுமே வாழ்க்கையை அனுபவிப்பவர்.

### ‘இ’ ரகம்

தனித்துவம் வாய்ந்தவர், பெரும்பாலும் உயர்ந்த சிருஷ்டித்தன்மை அல்லது கலைத்தன்மை வாய்ந்தவர், நுண்ணுணர்வுடையவர், இரகசியமானவர், விளங்குவதற்குக்கடினமானவர், உண்மையான உணர்ச்சிகளை மறைக்க எப்போதும் முகமூடி அணிபவர், ஒரு தனிரகம், பிறவிப்புரட்சிவாதி, வெளியிலிருந்து சுமத்தப்பட்டால், மாற்றத்தை வெறுக்கும் இவர், அதைத் தானே ஒழுங்கு செய்து கொண்டால் விரும்புபவர், பொறுமையுள்ளவர், அமைதியானவர், தர்ம சிந்தையுடையவர், உணர்ச்சிவசமானவர், ஒரே இடத்தில் நிலைக்க விரும்புபவர், ஒரு நல்ல பிரயாணி, ஆனலும் ஈற்றில் வீட்டுக்குத்திரும்பும் ஆவல் மிகுதியாகக்கொண்டவர், சகிப்புத்தன்மையுடைவர், கடந்த காலத்துக்குக்கலைகளுக்கும் ஆழ்ந்த மதிப்பு அளிப்பவர், [illegible]பாலும் இசையில் ஈடுபாடுடையவர், நன்ருக வேலை செய்யக் கூடியவர், ஆனல் இருந்துவிட்டுஇருந்து, தான் ஏதாவதொன்றில் ஈடுபடும்போது, பிறரைப்பற்றிக் கவனிக்கவேமாட்டார், மற்றும்படி, இரக்கமும், அனுதாபமுள்ளவர். ஒரே நேரத்தில் கஞ்சத்தன்மையையும், தாராள மனப்பான்மையயும் வெளிக் காட்டக் கூடியவர். புதிரான போக்குடையவர், ஒரு குறிப்பிட்ட சிலருக்கு மட்டும், நட்புறவில் விசுவாசம் காண்பிப்பவர்.

### ‘ஈ’ ரகம்

மகிழ்ச்சிகரமானவர், கலகலப்பானவர், வீட்டை விரும்புபவர், கலையுணர்வுள்ளவர், அழகு விரும்பி, சிருஷ்டித் தன்மையுடையவர், வளைந்து கொடுக்கக் கூடியவர். பட்சம் மிகுந்தவர், கைத்திறன் படைத்தவர், வேலைக்கு அதிக விருப்பமுள்ளவரல்ல, கவலையற்றவர் போல் தென்படுவார், ஆனலும், பெரும்பாலும், அதிக கவலை உள்ளவர், நீதியானவர், நியாயமானவர், விசுவாசமுடையவர், தீர்மானமற்றவர், மற்றவர்கள் உணர்ச்சிகள் பற்றி அக்கறை கொண்டவர், ஒரு சமயம் ஒருபோக்குள்ளவர், நிலையற்றவர், பிடிவாதமுள்ளவர், பழமைவாதியாகும் போக்குமுள்ளவர், நுண்ணிய அறிவுக் கூர்மையுள்ளவர், ஓரளவு உளவியல் சக்தி படைத்தவர், பாசமுள்ளவர், அமைதியானவர், அவசரமற்றவர், சமாதான விரும்பி, பகற்கனவு காண்பவர், அனுதாபமுள்ளவர், பெரும்பாலும் மற்றவர்கள் விருப்பத்துக்கு விட்டுக்கொடுப்பவர், சாதாரண இன்பங்களை அனுபவிப்பவர், சந்தோஷமான சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதில் [illegible]

## குடும்ப வாழ்க்கையில்…

( 8-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| வெ சந் | | கே | வி |
| ல பு | பாவ | | |
| சூ செ | சக்கரம் | | |
| | ரா | சனி | |

னும், அச்சாதகருக்குத் துறவுகிட்டும் என்பது சோதிடஇலக்கணம். இங்கே சந்திர இலக்கினதிபதி வியாழன், 12 திபதி சனியை நோக்கி நிற்றல் காண்க. பிரிகத் ஜாதகம் என்ற சோதிடநூல் துறவு நிலை பற்றி விளக்கும் போது ‘‘இலக்கினதிபதி வேறெக்கிரக நோக்குமின்றி நின்று சனியை நோக்கின் அச்சாதகர் துறவுபூண்டு சன்னியாசியாவார்’’ என்று கூறுகின்றது. இங்கே சந்திர இலக்கினதிபதி வியாழன், வேறெக்கிரகநோக்குமின்றி நின்று சனியை நோக்கல் காணலாம்.

சந்திர இலக்கினப் பிரகாரம், 7திபதி புதன்12 ல்மறைந்து விட்டார். அதுவுமன்றிச் சூரியனுக்கு அண்மித்த பாகையில் நின்று, அக்கோளின் சுடரால் பாதிக்கப்பட்டும் விடுகின்ருர். இன்னேரன்ன நிலையில் தான் சுவாமிகள், விவாக பந்தமிருந்தும், சற்றும் நெறி பிறழாப் பிரமச்சரியம் அனுஷ்டிக்க விழைந்தது.

சந்திரனுடன் நிலைகொண்டுள்ள கோள், களஸ்திரகாரன் வெள்ளி. வெள்ளியும் சந்திரனும் பரம வைரிகள். உச்சம் பெற்றகோள்இராகு சந்திரனையும் வெள்ளியையும்தாக்கி நிற்கின்ருர். வீரியஸ்தானகிய 3ல், நீசம் பெற்ற ஞானகாரகன் கேது. சயன சுகஸ்தானதிபதி சனி சந்திரனுக்கு அட்டமத்தில். காதல் கேளிக்கைக்குரிய கோள் 12ல் மறைந்து விட்டார். இக் கிரக அமைவுகள் விளக்குவதென்ன? துறவன்றிப் பிறிதெதுவுமில்லை.

கட்டுரையின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட அம்மையாரின் கேள்வியும், அதற்குத் துறவியாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அளித்த பதிலும், சுவாமிகளின் குடும்ப வாழ்க்கை நிலையைப் படம்பிடித்துக்காட்டிவிடுகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ச சுவாமிகள் 1886ம் ஆண்டு ஆவணி மாதம் 16ந் திகதி திங்கட்கிழமை காலை இவ்வூனுடலை நீத்துச்சமாதியடைந்தார். சுவாமிகளுக்குக் கிட்டிய பேரின்ப நிலை கிட்டும் வண்ணம் நாமும்ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ச சுவாமிகளை நினைவு கூர்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## கல்வி

வகுப்புகள்

வர்த்தகம், விஞ்ஞானம், கலை, சிங்களம், தையல் வகுப்புகள் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். விடுதி வசதி அளிக்கப்படும். பெண் பாடசாலை, வர்தகக் கல்லூரி, [ஸ்தாபிதம்:1924] நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை. 2344

மெக்கானிக் பாடங்கள்:

மோட்டார் டிரக்டர், டீசல் மெக்கானிக் பாடங்கள் நவீன முறையில் ஆறு [6] மாத காலத்தில் முழு நேரப் பயிற்சி அளிக்கப்படும். விபரங்கட்கு 20-2-67 க்கு முன் விண்ணப்பிக்கவும் அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். INSTRUCTOR, ஸ்ரீ விக்னேஸ்வரா மோட்டார் ஸ்ரோஸ், 8/4, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 1525

வகுப்புகள்:

குரு வித்தியாலய வர்த்தக பிரவேசப் பரீட்சை, அரசாங்க வர்த்தக பரீட்சை, கனிஷ்ட தராதரப் பரீட்சை [சாதாரணம்] [உயர்தரம்] லண்டன் வர்த்தக பரீட்சைகள் முதலியவற்றுக்கு தினமும் வகுப்புகள் நடைபெறும். சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும். வர்த்தக கணக்கியல் கல்லூரி, 330, காங்கேசன்துறை வீதி, [சீதா சோடக் கம்பனிக்கு முன்], யாழ்ப்பாணம். 1550

## தேவை

உதவியாளர்:

அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய ஒருவருக்கு வீடு நடாத்துவதற்கு முதிய வயது உடையவர் ஒருவர் உதவிக்கு வேண்டும். மரக்கறி போசனகாரர் விரும்பப்படுவர். உடனடியாக மு. குமாரசாமி, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 1537

மனேச்சர்களும், விற்பனையாளர்களும்

எங்கள் பெற்ரேல் விநியோக நிலையங்களுக்கு மனேச்சர்களும், விற்பனையாளர்களும் தேவை. மனேச்சர்பதவிக்குரொக்கப் பிணை ரூ. 3000/-ம் விற்பனையாளருக்கு ரூ. 250/-ம் செலுத்தவேண்டும். மனேச்சர் மாதாந்த வேதனம் ரூ. 175/- விற்பனையாளர் ரூ. 100/-. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1545

பெண் விற்பனையாளர்:

பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் ரூபா 10-00. விஞயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1536

## பயிற்சி

மேசன் பயிற்சி

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். வகுப்புகள் மேசன் பயிற்சி, கட்டிடங்களுக்குப் படங்கள் போடும் பயிற்சி [Draughtsman Course] இவை ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்பித்துக்கொடுக்கப்படும். விபரங்கள் நேரில் 213, செல்லம்ஸ் சீமென்ற் வோக்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 1540

## விற்பனைக்கு

புத்தகம்:

மூன்றே மாதத்தில் இங்கிலிஷ் பாஷையை கற்றுக்கொள்ள வகுக்கப்பட்ட நூல் தமிழில் ரூபா 1-00. Gnanaraj, P. o Box 357, Colombo. 1520

## முடிக்குரிய காணியில் அனுமதியின்றி குடியேறியதாகவழக்கு

புத்தளம், புதன்

அட்டவிற்றுப் பகுதியில் அரசாங்கத்தின் அனுமதியின்றி முடிக்குரிய காணிகளில் குடியேறிய 32 பேர் மீது தொடரப்பட்ட வழக்குநீதிபதி திரு. பிரேமவன்சாகுலகரத்தினமுன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது இவர்களைக் குடியமர்த்த ஏற்பாடு செய்ததாக க்கூறப்படும் ஏச்.பி இடமாள் அப்புகாமி என்பவரைப் பிணையில் செல்ல அனுமதியளிக்க மறுத்தார். மற்றவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை இம் மாதம் 18-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

புத்தளம் காரியாதிகாரி திரு.கே. கோபாலரத்தினம் புத்தளம் பொலிஸாருடைய அனுசரணையுடன் வழக்கை தொடர்ந்திருந்தார்.

## சிரமதானம்

ஊர்காவற்றுறை, வியா.

தலைவர், செயலாளர் உட்பட வேலணை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வேலணையில் ஒரு வீதியை சிரமதானம் மூலம் அண்மையில் சீர்படுத்தி அமைத்தார்கள்.

இவ் வியக்கத்திற்கு வேலணை கிராமசபைத் தலைவர் திரு. பு. சுப்பிரமணியம் தலைமைவகித்தார். தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமசேவையாளர், கிராமமுன்னேற்றச் சங்கப் பிரமுகர்கள், மற்றும் பலர் சமுகமளித்து இயக்கத்தைச் சிறப்பித்தார்கள்.

## இடம் மாறுதல்

ஆசிரியர்:

கொழும்பில் பணி புரியும் தமிழ் [சி. த. ப.] ஆசிரியை யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் பயிற்றப்பட்ட சி. த. ப, ஆசிரியர் ஆசிரியையுடன் இடமாற்றம் செய்துகொள்ள விரும்புகிறார். தொடர்பு கொள்ளவும். இரத்தினசபாபதி, 15, பாண்ஸ் இடம், கொழும்பு. 1532

# 'குருக்களின் மரணம் தற்கொலையே'

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 11-ம் திகதி திடீரென மரணமான வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் கோவில் பூசகரும் 7பிள்ளைகளின் தந்தையுமான அருணசலம் துரையப்பாக் குருக்களின் மரணம், சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நேற்று முன்தினம் மூன்ருவதுதினமாகத்தொடர்ந்துவிசாரணை நடத்தினர்.

காலஞ்சேன்றவரின் மரணம் சம்பந்தமாகச ாட்சிகளின் சாட்சியத்துக்கும் பிரேதபரிசோதனை செய்த டாக்டர் காலஞ்சென்றவரின் வயிற்றுள் கிருமிநாசினி இருந்ததாகத்தெரிவித்ததற்குமிடையில்முரண்பாடிருந்ததால் பொலிசாரைப்புலன் விசரணைசெய்யுமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து நேற்றைய தினம் தனபாலசிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் தலைமைக்காரியால பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொஸ்கோவினல் மரண விசாரணை அதிகாரி முன்னல் ஆஜர் செய்யப்பட்டு விசாரணைசெய்யப்பட்டார்.

இம்மரணம் சம்பந்தமாக ஏற்கனவே காலஞ்சென்றவரின் மனைவியான மங்கயர்க்கரசி, மகன சிவபாலன், மூத்த மகளான கோமளாம்பிகை, வர்த்தகர்களான இராஜசூரியர். இராஜசிங்கம், கனகசபை ஆகியோர் விசாரணைசெய்யப்பட்டார்கள்.

தனபாலசிங்கம்[38]வயது நேற்று சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் குருக்களின் மரணம் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கிய மரணவிசாரணை அதிகாரி "தேவையில்லாமல் வேறு குடும்பவிவகாரங்களில் தலையிடவேண்டாம்" என தனபாலசிங்கத்துக்குக் கூறினர்.

## ராஜரத்தினவின் திடீர். . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடற்ற முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். இதே சமயம் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்து கொண்டு, அரசாங்கத்தின் கொள்கையைப் புறக்கணித்து, தமது கொள்கையைப் பிரசாரம் செய்யும் ஒருவர் கூட்டுத்தாபனத்தையும் தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தமாட்டாரென்பது என்ன நிச்சயம்?

பெந்தர — எல்பிட்டிய, பலாங்கொட, பண்டாரவளை தேர்தல் முடிந்ததும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்மீது அரசாங்கக் கட்சிக்கூட்டத்தில் 'சமஷ்டிக் கொள்கை' பற்றிக் கூறியதற்காகக் குறைகூறியவர்கள், இப்பொழுது என்ன சொல்லப்போகிருர்கள்?

விட்டது. அரசாங்கத்பின் திட்டங்களையும் கொள்கைகளையும் அமுல் நடத்த வேண்டியகடமையும்பொறுப்புமுடையஅரசாங்க ஊழியர்கள் அரசியல் ஊழியர்ளாகமாறிவிருப்புவெறுப்புக்களுக்குள்ளாவதால் நாட்டின்முன்னேற்றம் பாதிக்கப்படும். பிரான்ஸில் நாளுக்கொருபிரதமரும் வாரத்துக்கொரு மந்திரி சபையுமாக ஸ்திரமற்றஅரசாங்கமிருந்து வந்தபோது அந்நாட்டின் நிர்வாகசேவை, நிரந்தர அதிகாரசேவை ஸ்திரமானதாக, அரசியல் கலப்பற்று இருந்துவந்ததால் பிரஞ்சு மக்கள் பாதிக்கப்படவேண்டியேற்படவில்லை. நமது தலைவர்கள் இதுபற்றிச் சிந்திப்பார்களா?

## அரசாங்க அதிபர்கள் மகாநாடு

அரசாங்க அதிபர்கள் மகாநாடு ஒன்று மூன்று தினங்களாக கொழும்பில் நடைபெற்றது. இம் மகாநாட்டில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா உரை நிகழ்த்துகையில்அரசாங்கத்தின் துரித உணவு உற்பத்தி திட்டம் பற்றியும் நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசிய ஐக்கியத்தின்அவசியம்பற்றியும் குறிப்பிட்டதுடன், உணவு உற்பத்தித்திட்டம் மற்றும் அரசாங்கத்தின் திட்டங்களைச் செயல்படுத்தாமல் சதி நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களை வேலை நீக்கம் செய்யவேண்டும் என்றும் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் கூறியிருக்கிறார். உள்நாட்டு அமைச்சர்டாக்டர் டபிள்யூ. தஹநாயகா உரைநிகழ்த்துகையிலும்அரசாங்க ஊழியர்பற்றிக்குறிப்பிட்டு, சில கிராம சேவையாளரின் 'அரசியல் சதி' நடவடிக்கைகள்பற்றியும் தெரிவித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க ஊழியர் இங்கு அரசாங்கக்கட்சி ஊழியர்களாக, அரசியல் கட்சி ஊழியர்களாக மாறிவருவது கடந்தசில [illegible] வருடங்களில் அதிகரித்து வந்திருக்கிறது. இது நாட்டின் சீரான நிர்வாகத்துக்குப்பெரும் தீங்கு. 'தேசியம்' என்ற போர்வை [illegible] 'வகுப்புவாதம்' தலைதூக்கி அது அதிகார வர்க்கத்திலுள்ளும்] நுழைந்து

## காணவில்லை

யாழ்ப்பாணம் சஞ்சுவாம் கோவில்வீதி ஒழுங்கையில் வசிப்பவரும், மாந்தை மேற்கு கிராமசபை அலுவலகத்தில் கடமையாற்றிவருபவருமான எஸ். பற்றிக்ரத்தினம் வயது 25 ஜனவரி 29-ம் திகதி தொடக்கம்மேற்படி அலுவலகத்திலிருந்து காணமற்போய் விட்டார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவிக்கவும். அல்லது கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும். திருமதி சிசில் சூசைப்பிள்ளை, 466/2 பி, சஞ்சுவாம்கோவில் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2441.


அருண ஏஜென்ஸீஸ் கோழிப் பண்ணை

ஆர். ஐ. ஆர்., ஒஸ்ரலொம், நியூ கூா ம்ஷயர், வைற்லெக்கோன் ஒரு நாள் குஞ்சுகள்- 60 சதம். ஒரு மாசக்குஞ்சுகள்-ரூபா 1-50. இரண்டு மாசக் குஞ்சுகள்பால்-கட்டி, ஊசி போட்டு, பூச்சி மருந்து கொடுக்கப்பட்டவை. ரூபா 3/-. பதிவு செய்யும் போது முற்பணம் கட்ட வேண்டும். குறிப்பு: ஞாயிற்றுக்கிழமைகளில் எமது ஸ்தாபனம் பதிவுகள் ஏற்றுக்கொள்ளாது. பண்ணையைப் பார்வையிட விரும்புவோர் பார்வையிடலாம்.

அருண ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 2414



இப்பொழுது திரையிடப்படுகிறது!

நவா
கொம்பனித்தெரு

கிங்ஸ்லி — கொழும்பு
பிளாஸா — வெள்ளவத்தை
வெலிங்டன் — யாழ்ப்பாணம்
விஜயா — மட்டக்களப்பு
ஸ்ரீ கிருஷ்ண — திருமலை
விஜிதா — ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்! கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!! அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்

காக்கும் கரங்கள்

5-வது வாரம்

கெப்பிட்டல் — கொழும்பு
மொடேர்ன் — பண்டாரவளை

எம். ஜி. ஆர்., ரத்ன,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனேரமா
மற்றும் பலர் நடிக்கும்

தொழிலாளி



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
GERMAN FILM FESTIVAL
10-30 a. m.
THE LIAR
4-45 p. m.
DREAMING LIPS
7-00 p. m.
OH MY PAPA
9-45 p.m.
THE LIAR

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி- வைஜயந்திமாலா
வஞ்சிக்கோட்டை வாலிபன்
[புத்தம்புதிய கொப்பி]

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
The Devil-Ship Pirates

REGAL - JAFFNA
NOW SHOWING
Charlton Heston
Richard Boone
THE WAR LORD


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

சாவகச்சேரி, புதன்

'வாதி செப்புக்கடாரம் என்கிறார். ஆனால் கோர்ட்டில் காட்டப்படுவது பித்தளைக் கடாரம். வாதி கூறிய அடையாளங்கள் சரியாக இருந்த போதிலும் உலோகத்தில் வித்தியாசம் இருக்கிறது' என்று கடாரம் ஒன்றை தம்பு-இராஜகோபால் வீட்டிலிருந்து சரவணை கந்தையா என்பவர் திருடியதாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், நீதிபதி விசாரணைமுடிவில் எதிரியை விடுதலைசெய்யும்போது கூறினார். எதிரி அக்கடாரம்தன்னுடையதென்று கூறிய போதிலும், அதை நிரூபிக்கச் சாட்சியங்கள் இல்லாமையால் கடாரம்வாதிக்கெனக் கூறி மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா எதிரியை விடுதலைசெய்தார். எதிரிசார்பில் புரக்டர் வி. செல்லத்தம்பி ஆஜரானார். வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப்பொலிஸார் வழக்கை நடத்தினர்.

---

## கார்ச் சாரதி கொலை?

கொழும்பு, புதன்

அனுராதபுரத்துக்கருகிலுள்ள ஒரு குளத்தில் மிதந்த ஒருவரின் சடலம் இப்போது அடையாளம்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறந்து கிடக்கக் காணப்பட்டவர் ஒருகார்ச்சாரதியென்றும், அவர் அங்கிள் என்று அழைக்கப்படுவார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. இவரதுதலையில் காயங்கள் இருப்பதாக டாக்டர்தெரிவித்துள்ளார்.

இறந்தவரின்காரை சிலர் வாடகைக்கு எடுத்துச் சென்றனரென்றும் இவர்கள் கார்திருட்டு, கோஷ்டியைச்சேர்ந்தவர்கள் என்றும் இக்கோஷ்டிகார்ச்சாரதியைகொலைசெய்திருக்கலாமெனபொலிசார் அஞ்சுகின்றனர்.

சாரதியின்கார் காட்டுக்குள்ளிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுஸ்ளது.

---

## "கோரிக்கை நியாயமானது"

யாழ்ப்பாணம். வெள்ளி

சாவகச்சேரிநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

"சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்கஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. தமக்கென மாத்திரம் வாழாது சமுதாயத்தின் பொது நலனிற்காக அரும் பெரும் தியாகத்தைச் செய்த இவர்கள் இப்பொழுது மாறியிருக்கும் ஓர் சுமுகமான சூழ் நிலையில் சமதர்மமும் சம நீதியும் வழங்குமாறு அவர்கள் அரசாங்கத்திடம் கோருவது நியாயமானதே. இக் கோரிக்கைகளுக்கு இச் சபை பரிபூரண ஆதரவைக் கொடுப்பதுடன் விரைவில் ஆவன செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றது."


### WANTED

An Accounts Clerk with a knowledge of Book-keeping and not less than 5 years experience. Salary According to qualifications. Apply in writing before 20-2-67 to Advt. No 2439, c/o Fela nadu, Jaffna. 2439

# ரூ. 15,000 பரிசு பெறுங்கள்!

"அதி பிரகாச சலவை தரும்"

# சன்லைட் போட்டி!

முதற் பரிசு ரூ. 5,000/- இரண்டாம் பரிசு ரூ. 2,000/-
200 ஆறுதற் பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூ. 40/-



சுத்தமான சுத்தமான ஆடையணிந்தவர்கள் ஒரு கூட்டத்தின் மத்தியில் எப்போதும் தனிக் கவர்ச்சியுடன் விளங்குவார்கள். "அதி பிரகாச சலவை தரும்" சன்லைட் போட்டியிற் பிரவேசித்து, சன்லைட் வழியில், தினமும் கச்சிதமாயும் சுத்தமாயும் திகழுங்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே!**

(1) மேற்காணும் படத்தில், சன்லைட்டினால் அதி பிரகாச சலவை செய்த கச்சித உடையணிந்திருப்பவர்கள் எத்தனை பேரென்று கணக்கிடுங்கள்.

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு கலப்படமான [illegible] தனை ஆடைகளைச் சலவை செய்யலாம் என்று குறிப்பிடுங்கள். (கவனிக்கவும்: [illegible] குறிப்புக் கிடைக்க, சன்லைட் விளம்பரங்களை வாசியுங்கள்)

(3) கீழ்க்காணும் கூப்பனில் உங்கள் விடைகளையும் பெயர் விலாசத்தையும் துப்புரவாக எழுதி, 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட 2 விசேஷ சன்லைட் சோப் உறைகளை இணைத்து தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்புங்கள்.

(4) ஒரு கூப்பனை 4 விண்ணப்பங்கள் வரைக்கும் உபயோகிக்கலாம். ஆனால் ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் 2 விசேஷ சன்லைட் சோப் உறைகள் இணைக்க வேண்டும்.

**விதிகளும் ஒழுங்குகளும்**

1. லிவர் பிரதர்ஸ் (சிலோன்) லிமிட்டெட், ஜே. வால்டர் தொம்சன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களினதும் அவர்கள் குடும்பத்தினரையும் தவிர இலங்கையில் வசிக்கும் அனைவரும் போட்டியிற் பங்குபெறலாம்.
2. நீலக் கட்டத்துக்கு மேல் 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட இரண்டு விசேஷ சன்லைட் உறைகள், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் இணைக்கப்பட வேண்டும்.
3. சகல விண்ணப்பங்களும் சுத்தமாக மையினால் எழுதப்பட்டு, [illegible] முன்போ, தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குக் கிடைக்கும்படி தபாலில் சேர்க்கப்பட வேண்டும். தெளிவாக எழுதப்படாத, தாமதமான அல்லது காணாமற்போன விண்ணப்பங்களுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
4. வந்து சேரும் முதலாவது முற்றும் சரியும் சுத்தமுமான விடைக்கு முதற் பரிசும் அடுத்ததாக இரண்டாவது பரிசும் ஒவ்வொன்றும் ரூ. 40 கொண்ட 200 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். ஒருவருக்கு ஒரு பரிசுக்கு மேல் வழங்கப்படமாட்டாது.
5. சரியான விடையும் பரிசு பெறுவோர் பட்டியலும் 1967 ஏப்ரல் 17ம் தேதி பத்திரிகைகளில் வெளியிடப்படும்.
6. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. அதுபற்றி எவ்வித கடிதக் தொடர்பும் ஏற்கப்படமாட்டாது. போட்டியிற் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் விதிகளை முற்றிலும் புரிந்து கொண்டு அவற்றுக்குக் கட்டுப்படச் சம்மதித்தவராகக் கருதப்படுவர்.

முடிவு தேதி 1967 மார்ச் 31

(1) சன்லைட்டினால் அதி பிரகாச சலவை செய்த கச்சித உடையணிந்திருப்போர் தொகை:

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு சலவை செய்யக்கூடிய கலப்படமான ஆடைகளின் தொகை:

பெயர்: ..............................

விலாசம்: ..............................

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | | |
| | | | |




-/37

ஒரு லீவர் உற்பத்தி

**சன்லைட் அதி பிரகாசமாகச் சலவை செய்கிறது-**
**வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்!**


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org